உ
சிவாயநம

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும் திருவருள் பூண்டது.

இதழ்: - 1 | பிங்களவருஷம் ஐப்பசிமாதம் 12-ம் திகதி வெள்ளிக்கிழமை [28-10-77] | சுடர் - 3

# மதியால் அனைத்துலகும் ஆளலாம் என்ற இந்த ஆங்காரம் தவிர் நெஞ்சே!

## தினைத்தனையும் பொறுமையிலாத உடம்பில் வாழும் நெஞ்சை நோக்கி திருநாவுக்கரசர் பெருமான் மொழிந்த தமிழ்வேதம் இவையாகும்

நெஞ்சம் ஆசைவயப்பட்டபோதுஅது அதன்வழியே சிந்திக்க நினையுமேஒழிய பின்முன் யோசியாது. இந்தவகை தன்னை இடர்படுத்தும் நெஞ்சிற்கு புத்திபுகட்டுகிறார் எம்பிரான் திருநாவுக்கரசர் இத்திருப்பதிகங்களில். மிகவும் ஆழ்ந்த கருத்துக்கள் உள்ளன. இப்பாடல்களைக் கருத்துடன் கீழேதருகின்றோம். வாசித்து இன்புறுங்கள்.

திருநெய்த்தானம் என்னும் தலம் காவிரியாற்றின் வடகரையில் உள்ள தலம். திருவையாற்றிற்கு மேற்கே உள்ளது. சுவாமி பெயர் நெய்யாடியப்பர். அம்பாள் பெயர் வாலாம்பிகை. சரசுவதி தேவி வழிபட்டு பேறடைந்த தலம்.

உலகில் எத்தனையோ தத்துவ ஞானிகள் எல்லாத் தேசங்களிலும் தோன்றி உள்ளனர். அவர்களது காலத்தின் எல்லைகளை நாம் குறிப்பிட முடியாத அளவிற்கு தோன்றி உள்ளனர். இது இன்று மட்டும் அன்றி என்றுமே நிகழ்கின்றதொன்றாகும். அத்தகைய மகான்கள் உண்மைப்பொருளை உணர்ந்து தத்தமது ஆராய்வுகளை தத்தமது சமயக் கொள்கைகளாக; அன்றியும் தத்தமது மொழி மூலமாக உணர்த்திவிட்டுச் சென்றிருக்கின்றனர். இன்னமும் உணர்த்தும்படி வந்துகொண்டே இருப்பார்கள். இது நீள நிகழஇருக்கும் செயலாகும். அப்படியாக விளங்கிடும் நிலையில் இதுகாறும் உலகில் வந்த தத்துவஞானிகளின் உபதேசங்களை எல்லாம் திருநாவுக்கரசர் உச்சிவிட்டார் என்று எண்ணும்படி இந்தப்பாடல் அமைகிறது. நீங்கள் வேறு தத்துவஞானிகளின் உபதேசங்களை நிச்சயமாகப் படித்திருப்பீர்கள். சாத்திரங்களாக, சமயக் கோட்பாடுகளாக, சமய அநுட்டானங்களாக எத்தனை எத்தனை நுண் அறிவின் பயன்களாக வேறுவேறுமொழிகளில் உண்டு என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. ஆனல் இவர் தருகின்ற பாடலில் என்ன பொற்புடையதாக; இறைவன் அருளினைப் பெறும் வழியை தனது நெஞ்சிற்கு மொழிந்து புத்தி புகட்டுகின்றார். அவர் தன் நெஞ்சிற்கு மனதிற்கு பாடலால் மொழிந்திடத் தேள்வை இல்லை. பின்னர் இவையாவும் கீழ்நிலையில் நின்று அவதியுறும் எம்போன்றோர்க்காகும். ஆகவே எமது வாழ்க்கையில் ஒரு நாளாகுதல் இதன் தாற்பரியங்களை நாம் உணர்ந்து கொள்வதும் நல்லது தானே!

அடுத்து திருநாவுக்கரசர் சமணசமயத்தின் நின்றும் சூலைநோய் காரணமாக திருவதிகை வீரட்டானத்து வந்து சிவன் அருளால் சூலைநோய்நீங்கி சைவனாக மாறி உய்ந்த பிற்பாடு, ஆரோ ஒரு பெரியவர் சொல்லிவைத்த தத்துவநெறியினைக் கொண்டு சமணசமயத்தைக் கடைப்பிடித்து நின்ற சமணர்களுக்கும் அவரது குருமாருக்கும் இது ஒருவீழ்ச்சியாகி விட்டது. அதுவேளை அவர்கள் தங்களது சமண சமயத்தை நிலை நிறுத்திட அரசனுடைய உதவியை நாடுகின்றனர். அக்காலத்திருந்த அரசனும் சமணசமயப் பற்றுடையன் ஆதலாலே அவனும் சமணருடைய திருகு தாளங்கள் எதற்கும் இணங்கிடும் இயல்புடையனாய் நிற்பவன். ஆகவே திருநாவுக்கரசர் சூலைநோய் நீங்கியது உண்மை அல்ல அதுபொய். தமக்கையார் சைவத்தில் நின்றமையால் தானும் சூலநோய் உண்டு என்று சூலநோய் வரலாற்றைச் சாட்டாக வைத்துக் கொண்டு போயிருக்கிறார் என்ற ஒரு செய்தியைப் பரப்பி அரசனையும் நம்பப்பண்ணி திருநாவுக்கரசரை துயர்செய்து அவரை இவ்வுலகில் இல்லாமல் செய்யபுத்தி கொள்கிறார். அதன்படி அவர்கள் மகாநாடு கூடிச்செய்த தீர்மானத்தில் ஒன்று; எதுவாயிருந்தாலும் திருநாவுக்கரசரை அரசன் முன்னிலையில் கொண்டு வரச்செய்து அதன் பின்னர் வஞ்சனையால் அவரை வதை செய்வோம் என்ற வகையாகும். அதன்பிரகாரம் அரசனுடைய மந்திரிகளும் சேனாதிபதிகளுமே அவரைப் போய் அழைத்து வருமாறு அனுப்பப்படுகின்றனர். அவர்களும் அவரிட சென்று அரசன் அவரை அழைத்துள்ளான் என்று தம்முடன் வரு

# தவம் தனக்கு ஒப்பது தவமே

## மெய்ப்பொருள்காணும் ஒருவரது அறிவுக்கு கந்தபுராணத்து கச்சியப்பசிவாச்சாரியர் அப்புராணத்து காசிபமுனிவர்வாயிலாகத் தரும் திருவருள் நிறைந்த உபதேசம் இதுவாகும்.

கந்தபுராணம் என்னும் தெய்வ நூலை நாம் பெற்றது அது எமது பிறவியின் பெரிய பேறு என்றால் அது உண்மை. அத்தகை திருவருளின் சீர் நிறைந்த புராணத்து வருகின்ற தவத்தின் மேன்மை பற்றிய வரலாறு ஈண்டு தரப்படுகிறது. இஃது காசிப முனிவர் தமதுமைந்தரான சூரன் சிங்கன் தாரகன் என்னும் மூவர்க்கும் எடுத்துமொழிந்த உறுதியான வாக்கியங்களாகும்.

தம் மைந்தரை அவர் நோக்கிச்சொல்வார்; உலகில் பிறவி எடுத்த உங்கட்கு யான் உறுதியாய ஒன்றினை சொல்வேன். அதுதான் என்மைந்தர்களே நீங்கள் மூவரும் அருமையான தவநெறியில் நில்லுங்கள். அந்தத் தவநெறியின் முறையினை எடுத்து நான் இப்பொழுது சொல்லுகின்றேன்.

பெரியோர்களாலே இவ்வுலகில் எடுத்து ஆராய்ந்திடத் தக்க பொருள்கள் மூன்றுள. அவையாவன: எவ்வுலகும் தோன்றுமுன்னே தோன்றிய பதி (கடவுள்) முதலாகும். இரண்டாவது அவனால் படைக்கப்பட்ட அருமையான உயிர்கள்; மூன்றாவது எம்மால் அறியாவகை அவ்வுயிரைப் பற்றிநிற்கும் பாசங்கள் எனவாகும்.

அத்தகைய மூன்றினுள் மூதல்வனாகும் பதியெனும் கடவுளாவான்; படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனும் உண்மை உணர்வைமறைப்பவனும் அருள் புரிபவனுமாகச் சொல்லப்பெறும் இச்செயல்களை எங்கும் நிறைந்துநின்று நடத்திவரும் நீலநிறத்துடன் விளங்கும் கண்டமுடைய சிவனே என்று அவன் தன்மையை வேதங்கள் கூறிடும்.

அவ்வாறான பற்றுவெறுப்பு எனும் இரண்டும் இலாத பரமனின் தன்மையை இன்ன தன்மையாயவன் என்று எம்மால் என்றுமே அறியப்படாதவன் என பெரியோர்கள் சொல்வார்கள், அதுவுமல்லாமல் அவனையே புகழ்கின்ற வேதமும் அவன் இயல்பு இவ்வாறென துணிந்துசொல்ல முடியாது தடுமாறுவன என்றால் நாம் அவனின் இயல்பு இப்படித்தான் என்று சொல்லவல்லமை உடையோமோ!

அப்பால் ஆகாமியம் பிராரத்துவம் சஞ்சிதம் என்னும் மூவகையாலும் (அதாவது முற்பிறப்பினால் தந்தைதாய் வழியால் தனது இப்பிறவியின் செயலால்) வருகின்றனவே பாசங்கள் எனப்படுவன. பாசம் என்பது பற்றுக்கோடு. ஒருவரை ஓரிடத்துக் கட்டிவைத்தால் அவ்விடம்பெயராது நிற்றல்போன்று மூவகையான முறையாலும் பந்தித்திடும் பாசத்திநின்றும் எம்வலியால் நீங்கிடமுடியாது. அதுவுமன்றி அப்பாசம் உருவமான தன்மை இல்லாதது. அதை வாறல் வரும் விதி என்று சொல்வார்கள்.

அத்தகைய பாசத்தினால் உலகில் பிறந்திடும் எந்த ஒரு உயிரும் பந்திக்கப்பட்டே இருப்பன. அந்த உயிர்கள். அளவிறந்தன. அவைகள் அநாதியாகவே உள்ளன. அவை தாங்கள் தாங்கள் செய்யப்பெறுகின்ற தீவினை நல்வினைக்கேற்றிட்ட அவ்வினைகளின் வயத்தால் இவ்வுலகில் ஓய்வின்றி பிறந்து இறந்திடும். அவைஇப்பூமியில் பிறக்கும். கடலில் பிறக்கும்; நெருப்பில் காற்றில் வானில் பிறக்கும். அந்த உயிர்கள் பிறத்தற்கு ஓரிடம் நிலையானது இதுதான் என்று சொல்லிடமுடியாது. அதுவுமன்றிப் பிறந்த எந்த ஒரு உயிரிற்கும் அடுத்தபிறவி ஏதுவாயது எப்படிவரும் என்பதையும் அறியமுடியாது.

அவை மனிதராக மிருகமாக பறவையாக தாவரங்களாக இவை

(தொடர்ச்சி 2-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதியால் அனைத்துலகும் ....

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

மாறு கேட்கின்றனர். அப்படி வந்து அழைத்த அரசபிரதானிகளை நோக்கி எம்பிரான் திருநாவுக்கரசர் தமது பதிலை தேவாரப் பதிகமாகவே மொழிகின்றார். அதில் எத்தனையோ ஓர் உண்மைத் துறவியின் இலட்சியங்கள் நிலைகள்பற்றி பேசிவிட்டு ஓரிடத்தில் மிக உறுதியாகச்சொல்கின்றார். நான் உலகில் யாதும் பேசுவதென்றாலும் கண்டபடி பேசுவதில்லை. அவையும் இப்படியே பேசுவேன்.

''தற்பரமாய் சதாசிவமாய் தானும் யானும் ஆகின்ற தன்மையனை நன்மையோடும் பொற்புடைய பேசக்கடவோம் பேயர் பேசுவன பேசுதுமோ பிழையற்றோமே'' என்பதாக. இதன் கருத்தாவது நாம் உலகில் ஏதாவது ஒன்று பேசுவது என்றால் அப்பேச்சு எதைப்பற்றியதாக இருக்கும் என்றால் தானே ஒருமுதலாய் நித்தியமாய் உள்ள பெருமானுடன் நான் ஒன்றாக இணைகின்ற அவ்வாழ்விற்கேற்றதை பேசுவேன் அன்றி இந்த உலகில் மற்றைய பேயர் பேசுகின்றது போலப் பேசுவேனோ பிழை அற்றோமே என்பதாக. ஆகவே அவரே சொல்லியவாறுபோல சிவனும் உயிரும் இணைகின்ற இன்பத்திற்குரிய வாழ்வை பொற்புடைய தாகவே பேசுகிறார் இப்பாடலில். இதில் என்ன பிரயோசனம் என்று மனம் கொளளும் இயல்பான நிலையைவிடுத்து கொஞ்சம் அக்கறையுடன் படித்துப்பாருங்கள். ஒருக்கால் அல்ல; பலமுறை இவற்றைப் படியுங்கள். அது பொற்புடை பேச்சாக அவர் சொன்னவாறு இல்லையோ என்பது தெளிவாகும்.

திருச்சிற்றம்பலம்

மெய்த்தானத் தகம்படியுள் ஐவர் நின்று
வேண்டிற்றுக் குறைமுடித்து வினைக்குக்கூடாம்
இத்தானத் திருந்திங்ஙனுய்வா னெண்ணும்
இதனையொழி இயம்பக்கேள் ஏழைநெஞ்சே
மைத்தான நீள்நயனி பங்கன் வங்கம்
வருதிரைநீர் நஞ்சுண்ட கண்டன் மேய
நெய்த்தான நன்னகரென் றேத்தி நின்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

உடம்பான இத்தானத்து உள்ளாக புலன்கள் என்பவர் ஐவர் நின்று தாம் வேண்டிய மது கருமங்களை தாங்கள் விரும்பியபடி செய்திட, அவர்க்கே வசதியாக உள்ள இந்தக் கூடாய உடம்பில் இருந்து இங்கு இன்னமும் நாம் உய்யும்படியாக எண்ணுகின்ற அந்த ஒரு எண்ணத்தை நீ விடு. நான் சொல்வதைக் கேள் ஏழைமை உடைய என் நெஞ்சே! இந்தவகை அந்த ஆட்டோட்டங்களை விடுத்து பின்னர் மைபூசிய நீண்ட வரிவிழி உடைய உமையம்மையாரின் பாகமுடையவன். பாற்கடலில் எழும் திரையான நீரில் மிதந்து உலகை அழித்திடவந்த நஞ்சைஉண்டு உலகினைக் காத்து அந்த நஞ்சினை உட்செலாது தடுத்து கழுத்தில் தங்கிட வைத்தலால் என்றும் அருள் உடைய திருநீலகண்டமுடையவன், அவன் இருக்கும் திருநெய்த்தான நன்னகர் இதுவென்று போற்றிநின்று நீ நினையுமாறு நினையவல்லையேல் நீஉய்யலாம். 1

தலங்கள் எந்நிலையிலாகுதல் இருக்கலாம். ஆனல் சிவன் அங்கு இருக்கின்றார் என்பதை மட்டும் நாம் மறந்திடுதல் கூடாது, அதனை நினைவுறுத்தும் இயல்பில் இது சிவன் இருந்திடும் நெய்த்தான நகர் என்று என்நெஞ்சே நினை நினைந்தால் உய்யலாம்; ஆனல் இப்படி இதை நினைந்து என்ன பிரயோசனம் என எண்ணாதே! சந்தேகப்படாதே நீ நினை. தடுமாற்றம் கொள்ளாதே என அறிவுறுத்துகிறார் தன் நெஞ்சிற்கு இத்திருப்பாடலில்.

ஈண்டா இரும்பிறவித் துறவா ஆக்கை
யிதுநீங்க லாம்விதியுண் டென்று சொல்ல
வேண்டாவே நெஞ்சமே விளம்பக் கேள்நீ
விண்ணவர்தம் பெருமானார் மண்ணி லென்னை
ஆண்டானன் றருவரையாற் புரமூன் றெய்த
அம்மானை அரிஅயனுங் காணா வண்ணம்
நீண்டா னுறைதுறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

ஈண்டு உற்ற பெரும்பிறவியில் நீக்கமுடியாத இந்த உடம்பினை, வேறுவழியான துறவின்கொள்கைகளால் நாம்நீங்கலாம். அதற்குவிதி உண்டு என்று நீ சொல்லவேண்டாம். என் நெஞ்சமே நான் சொல்வதை நீ கேள், தேவர்களது பெருமானார் அவர் இந்த மண்ணில் என்னைத் தடுத்து ஆட்கொண்டவன். மேருமலையாய வில்லால் முப்புரத்தையும் எரிசெய்தவன். பிரம விஷ்ணுக்களும் அடிமுடி காணமுடியாதவண்ணம் சோதியாய் நீண்டவன். அவன் உறையும் இடம் நெய்த்தானம் என்று நினையக்கூடியவகையாக நீ நினைந்தபொழுது உய்யும்வகை அதுவேயாகும். 2

பரவிப் பல பலவுந் தேடி யோடிப்
பழாங் குரம்பை யிடைக் கிடந்து வாளா
குரவிக் குடிவாழ்க்கை வாழ வெண்ணிக்
குலகை தவிர்நெஞ்சே கூறக் கேள்நீ
இரவிக் குலமுதலா வானோர் கூடி
யெண்ணிறந்த கோடி அமர ராயம்
நிரவிக் கரியவன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே

பலரையும் கும்பிட்டுபாடுபட்டு பல பலவும் தேடிஓடித்திரிந்து ஒருநாள் பாழாகிபபோகின்ற இந்த உடலில் நீ கிடந்து வீணே பொருந்திய இந்த ஒரு குடிவாழ்க்கையை வாழ்ந்திட எண்ணி கூச்லிட்டுத் தடுமாறும் சங்கடத்தை இனி விட்டுவிடு என் நெஞ்சே! நான் சொல்வதை உறுதியாகக் கேள். சூரியன் முதலாக உள்ள கடவுளர் குலமாகும் தேவர்கள் யாரும் கூடியும் அவர்மட்டுமல்லாதுஎண்ணிறந்தகோடி ஏனைய கடவுளரின் கூட்டமெல்லாம் ஓதியும்

தொடர்ச்சி—5ம்பக்கம் பார்க்க

## தவம் தனக்கு ....

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

யன்றிகல்லாகவும் திக்குகளை ஆள்கின்ற தேவராகவும் இன்னும் பலவாகவும் பிறக்கும். அப்படிப் பிறக்கும் உயிர் ஓர் தாய்வயிற்றில் உருவாகி வெளியே தோற்றுவதற்கும் முன்னாக கருவில் இறந்திடும். பிறந்தபின் சிலநாள்இருந்து இறக்கும். இளந்தாரியாகச் சாகும். மூப்படைந்து இறக்கும். அவ்வாறு அந்தந்த உயிர் பிறந்து சாகின்ற தன்மையை யாருமே தெரியவும் முடியாது. சொல்லவும் முடியாது.

ஓர் பொருளில் எத்தனை அணுக்கள் உண்டு என்று ஆராய்ந்தாலும் இந்த தோன்றிய அழிந்த உயிர்கட்கு கணக்கினை நாம் சொல்லவும் முடியாது. எம்மால் எண்ணவும் முடியாது

இப்படியானஇப்பிறப்பினை நாம் அடைந்துளோம் வாழ்கின்றோம் கல்விகளைக் கற்றோம் ஆராய்ந்தோம் எமது வாழ்வில் இதமுடன் வாழ்வதற்கு ஏற்ற வாகன உணவு இருப்பிட வசதிகளை நல்ல ஆராய்ச்சியின்பயனாகப் பெற்றோம். இன்னமும் பெற முற்பட்டோம். பெரும் செல்வத்தை ஈட்டினோம் வலியுடன் வாழ்ந்தோம் புகழுடன் வாழ்ந்தோம். இவையைப் பணிவருவதுதான் உறுதி என்றால் இவற்றினை நன்கு சிந்தித்திடும பொழுது இவை யாவும் கடல் அலையில் வந்த நீர்குமிழியே போல்வன

ஆனல் இவையாவும் அழிவுறும் நீர்க் குமிழி எனக் கருதப்பட்டால் அழியாததாக நாம் பேணுவதற்கு ஓர் பொருள் இல்லையோ என்று கேட்டால் அது தான் யாதெனில்?

தருமம் என்ற ஒருபொருள் உண்டு அது தான் நிலையானது. அதுகுறைவிலாத இப்பிறவியிலும் இந்த உடல் விட்டபின்பும் இன்பத்தை இலகுவாகக் கொடுக்க வல்லது. அது மிக அருமையுடன் பெற்றிடவரும் பொருளாகும். அதுதான் அழிவற்ற பொருள் என்பதை ஒருவழிப் பட்ட மன துடையார்க் கன்றி ஏனையோரால் உணர முடியாது.

இவ்வகை இந்த தருமத்தை நாம் பேணினல் தன்பயனாக அன்புளம் மைச்சேம் இறைவன் பால் அன்பு கொண்டால் அருள் எம்பால் அணையும். திருவருள் பெருக்கம் வந்தால் தவம் செய்யும் வாய்ப்பான மாட்சிமை நம்மை வந்துசேரும். அத்தவம் கைகூடிடப் பெற்ற பின்புதான் நாம் ஆர்? உள்ளம் ஆர் எனற தெளிவு வரும். மனத் தெளிவு கொண்ட அந்த உயிர் சிவனைச் சேர்ந்து கொள்ளும். சிவனைச் சேர்ந்த போது பிறவியும் தீரும் மிகு முன்பானகாலம் தொட்டு எம்முடன் பந்திதது நின்ற மூன்று வகையான வினையின் கட்டு களும் நீங்கிடும். அப்போது அந்த உயிர் எக்காலமும் விட்டு நீங்காத பேரின்பம்தனை அனுபவித்துக் கொண்டிருக்கும். என் அருமை மக்களே அந்தஇன்பத்தின் ஆனந்த நிலைபற்றி எமமால் சொல்ல முடியாது.

ஆகையால் உலகில் பெரு வலிமையைத் தம்பால் கொண்டது தவம ஒன்றேயாகும். அதை விடுத்து இன்னுமொரு பொருள் வலிமை உடையது என்று யாராலும் சொல்ல முடியுமோ? முடியாது. அந்தத் தவம் தான் சொல் லொணாத சிவகதி தனையும் கொடுத்திடும் ஆதலாலே நாம் மிகப் பக்குவ மாகப் பேண வேண்டியது தவம் ஒன்றினையே யாகும்.

இத்தகையதான தவம் பிறவியை நீக்கி மேலான முத்தியைக் கொடுத்து முதன்மைப்பட வைத்திடும். இதுமட்டுமல்லாமல் இந்த உலகில் நாம் பெறக்கூடிய இன்பம் யாவையும கொடுத்திடும். அதுவன்றி எம் உள்ளத்து நினைக்கின்ற பேறுகள் யாவையும் தருவது இந்தத் தவம் ஒன்றேதான்.

ஆதலில் பல நாளாக மிக அருமையாகப் புரிகின்ற பெரும் தவம் இப்பிறப்பு மறுமை என்கின்ற இரண்டிற்கும் இன்பம் தருதற்கு ஏதுவான காரணப் பொருளாய் உள்ளது. இப்படி இருமைக்கும் இன்பமடைய வைப்பது ஆதியான சிவனருளின் வண்ணமாக நிகழும் என்பதை உணருங்கள்.

ஒருமைப்பாடான தவத்தை ஆற்றி துன்பம் வந்தாலும் நோவுறாது புரிந்து அதன் பயனால் அருமைப் பொருளான முத்திப்பேற்றை அடைந்து கொண்டவர் சிலர் இதுவன்றி இப்பிறப்பு மறுமை எக்காலமுமே போகபோக்கிய இன்பத்தை அத்தவத்தால் அநுபவிப்பார் சிலர். போகமும் முத்தியும் தவத்தினல் பெற்றோரும் சிலர் உளர்.

இதனை எல்லாம் பெரியோர்உணர்ந்து கூறினலும் இந்த உலகில் உள்ள மனிதர் தம்முடைய இயல்பின் செயலான கொடுமை கொலை களவு வஞ்சனை இத்தியாதி கருமங்களில் நின்றும் நீங்குகின்றாரில்லை. அவற்றினின்றும் நீங்கமுடியாமலும் இருக்கின்றார். இவைபுரிதலாலே தமக்குப் பின் ஏற்படும் தமது துன்பத்தில் நின்றும் நீங்கினரில்லை. தமக்கு உற்ற துன்பத்திற்கு மூலகாரணம் என்ன என்பதை சிந்தித்து தெளிகின்றாருமில்லை. பிறந்தார் ஆசையில் சிக்கினர் கொன்றார் கோபித்தார் இறந்தார் பின்னரும் பிறந்தார் விட்டகுறையில் நின்றும் மீள ஆரம்பித்தார். இதனலே பிறவித்துயரில்நீள மூழ்கினரே ஒழிய அழிவிலாத முத்தி இன்பத்தை பெறமுடியாதிருக்கின்றார்.

ஆதலால் மக்களே! தவம் தன்னிலும்பார்க்க மிக்கதொரு பொருள் இங்கில்லை. குறைவிலாத நற்சீருடைய தவத்தினுக்கு நேராக உள்ள பொருளும் இல்லை. செய்திடும் செயல்களில் தவம் புரிதலினும் பார்க்க அரிதாய செயலும் வேறில்லை. சொல்லப் போனல் தவம் தனக்த ஒப்பது தவம் என்றே சொல்லலாகும்.

எனது மைந்தர்களே இதனைப் பாருங்கள்! தங்கள் ஆற்றலாலே தமது உடல் வருந்தும் படி தவம் செய்தவர் அல்லவோ தேவராகி மேலான பதங்களை பதவிகளை அடைந்து கொண்டவர். இதனை நான் உங்கட்கு சொல்லியும் காட்டவேண்டுமோ. நீங்கள் இதை உணரமாட்டீர்களோ?

சிவன்பால் பத்திமை யான நெறியுடன் பெரும் தவம் புரிந்து முத்தி பெற்று ஆநாதி யான ஈசனுடன் கலந்துள்ள பெரியோர்களின் பெருமையை இத்துணை என நாம் பேச முடியாது. போகமும் திருவும் முத்தியும் ஒருங்குடன் பெறும் உண்மைத் தபோதனர் என்று படைக்கின்ற காக்கின்ற கடவுளராகிய பிரமவிட்டுணுக்கள் ஆதியோரை நாம் கூறிடமுடியும்

இதை விடுத்து பல உயிரையும் கொன்று தமது ஆங்காரத்தைச் செலுத்தி பூமியில் உள்ள உயிர்கட்கு பெரும் அல்லலினை விளைத்து மகிழ்ந்து அந்தவகைச்செயலில் நிற்கின்ற அந்த தவம்புரியாத பாவிகட்கு இந்த உலகிலும் இன்பமில்லை அப்பாலான உலகிலும் இன்பமில்லை.

ஆனமையால் எனது மைந்தர்களே

தொடர்ச்சி—5ம்பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டிலும் எண்பதிலும்

அன்ெருருநாள், யோக சுவாமிகளின் ஆச்சிரமத்தில், தனிமையில் தலைகுனிந்த படியிருந்த அப் பெரியார் நிமிர்ந்து;

''எட்டுவயதிலே சிலை தோய்க்கவும் செப்பு மினுக்கவுந் தொடங்கியவர்கள் எண்பதிலும் அதைத்தான் செய்கிருர்கள்.

என்று தமக்குள்ளே பேசிக்கொள்வது போலச் சொன்னுர். இயல்பாத அவரிடம் காணப்படும் குதூகலமான பேச்சும், மலர்ந்தமுகமும், அன்று காணப்படவில்லை. அவர் திருவாய் மலர்ந்த வாக்கியத்திலிருந்து யாழ்ப்பாண மக்களின் போக்கைக் குறித்து அவரின் உள்ளம் கவலையில் ஆழ்ந்திருந்த தென்பது வெளிப்படை. ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன், ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணச் சமய நிலையைக் குறித்து மிகமன வேதனைப் பட்டவர், அந்த நிலையில், நூருண்டுக்குப் பின்னும், மாற்றம் இருப்பது போல யோகசுவாமிகளுக்கும் தென்படவில்லை,

சுவாமிகளின் உள்ளக் கிடக்கையின் எதிரொலியாக வெளிவந்த வாக்கியத்தில் எவ்வளவு உண்மை பொதிந்திருந்தது!. நூற்றுக்குத் தொண்ணூற் ெறன்பது வீதம் மக்களின் சமயம் வெளிவேடத்திலும் சம்பிரதாயங்களினும் தொடங்கி அவற்றுடனேயே நின்று விடுகின்றது. எந்த வழிபாடும் உள்ளத்தூய்மையை வளர்க்கவும் பஞ்சப் புலன்களின் சேட்டையைக் கட்டுப்படுத்தவும், நிலையில்லாததனவாகிய உலகவிவகாரங்களிலுள்ள பற்றைக் குறைக்கவும், இறையன்பைப் பெருக்கவும், உதவவேண்டும். இவற்றை அடைவதற்கான முயற்சியின் முதற்படி தான் யோகசுவாமிகள் விமரிசையாகக் குறிப்பிட்ட ''சிலை தோய்ப்பதும் செம்பு மினுக்குவதும்'' ஆகிய வெளி ஆசாரங்களும் கிரியைகளும். உள்ளம் சம்பந்தப் படாது உடம்பினுல் மாத்திரம் செய்யப்படும் வழிபாட்டினுல் என்ன பயன்?

வழிபாடு, காயம் வாக்கு, மனம் ஆகிய முன்றினுலும் செய்யப்படுவது. பஞ்சாட்சரத்தை ஓதுவதினுல் நன்நெறி கைகூடுமென்பதில் ஆட்சேபமில்லை, ஆனுல் அன் நன்னெறியாகிய பயன் ஓதும் முறையில் தங்கியுள்ளது. பஞ்சாட்சரத்தை ஓதும் முறையைச் சொல்லவந்த திருஞானசம்பந்தப் பிள்ளையார், அது.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது''

என்ருர் காதலாகிக் கசிவது உள்ளத்து நிகழ்ச்சி; கண்ணீர் மல்குதல் காயத்தின் நிகழ்ச்சி; ஓதுதல் வாக்கின் நிகழ்ச்கி. இவை மூன்றும் ஒன்றித்து நிகழ்ந்தக்கால் பெறப்படும் பயன் தான் ''நன்னெறி'' அன்றிக் கிளிப்பிள்ளைபோல வாக்கினுல் மாத்திரம் எத்தனை முறை தான் பஞ்சாட்சரத்தை ஒதினுலும் பயனில்லை.

வழி பாட்டில் முக்கியமாகச் சம்பந்தப் படவேண்டியது உள்ளம் (மனம்). '' அழுதால் உன்னைப் பெறலாமே'' என்று மணிவாசகர் புலம்பியதன் பொருளும் இதுவே. காயத்தின் செயலாகிய அழுகை உள்ளத்தெழுகின்ற அளவற்ற காதல் காரணமாக உண்டாகும் நெகிழ்ச்சியின் பிரதி விப்பம். உள்ளத்து அன்பில்லாது செய்யப்படும் சம்பிரதாயங்கள்யாவும், புறக்குடத்தில் வார்த்த தண்ணீர் போலப் பயனற்றவாகும்

'கையொன்று செய்ய விழியொன்று நாடக், கருத்தொன்று எண்ணப்
பொய்யொன்று வஞ்ச நாவொன்று பேசப், புலால் கமழும்
மெய்யொன்று சாரச், செவியொன்று கேட்க, விரும்புமியான்
செய்கின்ற பூசை யெவ்வாறுசொல்வாய் வினை தீர்ப்பவனே?.

என்னும் பட்டினத்தடிகள் வாக்குச் சிந்திக்கத் தக்கது. அருமையாய்க் கிடைத்த இந்த மானுட சரீரம் விழும்வரையும் ''சிலைதோய்ப்பதிலும் செம்பு மினுக்குவதிலும்'' காலத்தைப் போக்கினுல் இறைவன் திருவருள் கைகூடுவது எப்போது? மனிதன் வாளா பிறந்திறந்து ஒழிகின்ருனே என்ற கவலையே கருணை உள்ளம் படைத்த யோகசுவாமிகளின் நெஞ்சை உருக்கியது.

கோயில் மாறிக் கோயிலாக எங்கும் பறந்தடிச்சுத்திரிகின்ற மக்கள், கோயிலுக்குச் சென்றுப் அங்கு அமைதியாக மன மொன்றி நின்று வழிபட மாட்டாது வேடிக்கையிலும் வீண் பேச்சிலும் புலன்களை ஓடவிட்டு, தாகசாந்திக்குக் கானல் நீரை நாடி அலைபவர் போலாகின்றனர். பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் இறைவன் தன் திருவடிகளை மெய்யன்புடன் குறுகிப் பணிந்து பெறக் கற்றுக்கொள்ளாது வெளிவேடங்களிலும் விண்ணுணங்களிலும் இதனைவீணுக்கி விடுதல் எவ்வளவு அறியாமை.

''வித்தாயமாகக் கதை பேசிக்கொள்ளுவோம்,
வீணருடன் கூடிவிளையாடிக் கொள்ளுவோம்,
சத்தி சிவம் ஒன்ருன தன்மையைக் காண்கிலோம்,
சாதனையால் வேதனையைத் தீர்க்கின்ருேமில்லை,
''அலங்கார மாக ஆடை அணிந்து கொள்ளுவோம்,
அங்கும்இங்கும் எங்கும் அலைந்து திரிகுவோம்,
கலங்காத நன்னெறியிற்செல்கிருே மில்லைக்,
கந்தா; முருகா; வென்று கத்திக்கொள்ளுவோம்,

என்றஇந்த திருப்பாடல் மூலமாக யாழ்ப்பாணத்து மக்களின் போக்கை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிருர் யோக சுவாமிகள்.

கோயில்களுக்கும், சமயச் சடங்குகளுக்கும, மேடைப்பிரசங்கங்களுக்கும், பஜயனைக் கோஷடிகளுக்கும், ஏன - யாகங்களுக்கும் யோகங்களுக்குத் தானும்நமநாட்டில் குறைவே இல்லை. இன்று இவை யெல்லாம் மக்களின் ஆன்ம நலத்தை வளர்த் திருக்கின்றனவா என்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. எங்கே பார்த்தாலும் சுயநலம் தலை விரித்தாடுகிறது. அநீதியும், அட்டுழியங்களும் குடியும் கொள்ளையும் வஞ்சனையும்சூதும்இன்றேரன்னமலிந்துஏழைகளை யுஞ்சரிசெல்வந்தர்களையுஞ்சரி வாட்டுகின்றன. எங்கேபார்த்தாலும் அச்சமும் அமைதியின்மையும் நாள்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்பார்க்க)

# சிந்தனை

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்கிறேம். ஆனுல் இறைவனது எண்ணில் கீர்த்தியை உணர்கிறேமில்லை. நாங்கள் பெறும் நலங்கள் யாவையுமாகி, எமது உயிர்க்குயிராய் அறிவுக்கு அறிவாய், அறிவுக்கு அப்பாலாய் அலகிலா அருள் வடிவினனுகிய இறைவனை மறந்து தற்போதத்தையே பெருக்கி அறநெறிபிறழ்ந்து வாழுகிறேம். எங்கட்கு வேண்டிய வெல்லாம் பூமாதேவி வரையறுது வழங்கினுள் உணவு, உடை, உள்ளுறைப்பொருட்கள், நவநாகரிக வாழ்வுக்கு வேண்டப்படும் மூலப் பொருட்கள் அத்தனையும் வழங்குகின்ருள்.

விண்வெளிப் போக்குவரத்துச் சாதனங்களுக்குரிய மூலப்பொருட்களும் பூமியிலேயே கிடைக்கின்றன. பூமியில் மக்கள் வாழக்கூடியதாகத் தட்பவெப்ப நிலையும் இயற்கை வளங்களும் அதி அற்புதமாக அமைந்துள்ளது, நிலத்தில் உயிர் வாழ்வதற்கு நீர் இன்றியமையாதது. நீரில்லாது விடின் எவ்வுயிர்க்கும் உணவு இல்லாது போய்விடும். அதுவுமன்றி நெடுங்கடலும் தன்னீர்மை குன்றி தேவர்களுக்குரிய நித்திய நைமித்தியங்களும் தானமும் தவமும் நிலைபெறுது போகும் எனத்திருக்குறள் அறிவுறுத்துகிறது. நீரினது தண்மையைச் சமப்படுத்தும் வெப்பத்தை நல்கும் நெருப்பு. நெருப்பின் தன்மைஇல்லாவிட்டால் உடல் வளர்ச்சி பயிர் வளர்ச்சி இல்லாது உயிர்வர்க்கம் அழிந்து போகும். இவையாவும் இயங்குவதற்கு அசைவு வேண்டும். அசைவை ஏற்படுத்தி தோற்றமும் தோற்றத்தின் நிலைப்பும் ஏற்படகாற்று அத்தியாவசியமானது. இந் நான்கு பூதங்கட்குங் காரணமாய் நிலைக்களனுய் இருப்பது வானம் வானத்தில் நின்று உலகுக்கும் உயிர்கட்கும் ஒளிகொடுத்து உயிர்ப்பிப்பது சூரியன் சூரியனின் ஒளி பெற்று பூமியின் சுவாத்தியத்தைப் பருவங்களை ஏற்படுத்துவது சந்திரன். இத்தனையையும் நிர்வகித்து நடாத்துவது இயமானன் அல்லது ஆன்மா என்றுசொல்வார். எனவே மக்கள் இவ்வுலகின் வாழ்வதற்கு வேண்டிய யாவற்றையும் உண்டுபண்ணி அவையேயாகி நிற்பது இறைவனது சத்தியேயாகும் எனக் கூறப்பட்டுள்ளது. இதனை அப்பர் சுவாமிகள் ஒரு திருத்தாண்டகத்தின் தெளிவாகக் கூறுகின்ருர்.

''இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாயமாய் அட்டமூர்த்தியாகிப்
பெரு நலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறர் உருவுந் தன்னுருவுந் தாமேயாகி
நருதலையாய் இன்றையாய் நாளையாக நெகிநிமிர் புன்சடையடிகள் நின்றவாறே

இறைவன் அட்டமூர்த்தியாகி புவனமாகிப் பரிணமித்தது மட்டுமல்ல எமது உடலாகி உயிராகி உணர்வார் உள்ளுக்குள்ளாகி இருக்கின்ருன். இதனையே கொழும்புத்துறை யோகிகர்சுவாமிகள் ''கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்'' என்று அருளியுள்ளார். இவ்வுண்மையை அப்பர் சுவாமிகள் எவரும் எளிதில் அறியக்கூடியதாக இன்னுமாரு திருத்தாண்டகத்தில் கூறுகின்ருர்.

''ஊனுகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகி பிறவனைத்தும் நீயாய் நின்ருய்
நானேதும் அறியாதே என்னுள் வந்து நல்லனவும் தீயனவுங் காட்டா நின்ருய்
தேனும் கொன்றையனே நின்றிஊராய் திருவானைக்காவிலுள்ள சிவனே ஞானம்
ஆனுய் உன்பொற்பாதங் காணப்பெடிருல் அல்லல் கண்டங்கொண்டு அடியேன் என் செய்கேனே'

இறைவன் தனு கரண புவன போகங்களை எங்கட்கு அளித்தருளியது மல்லாமல் எங்களுடன் நின்று நல்லது யாது தீயது யாது செயற்பாலன யாவை, தவிர்க்க வேண்டியயாவை என்பதை நல்லறிவாக நின்று காட்டியருள்கின்ருர். இது என்றும் எப்பொழுதும் நிகழ்கின்றது. ஆனுல் நாங்களோ எனில் நாமே எதையும் செய்கிருேம் செய்வோம் எனநினைக்கின்ருேம் உண்மைகளை கற்றும் கேட்டும் வாழ்க்கையில் அழுந்தியும் நான என்பது அகன்றபாடில்லை. அப்பர் சுவாமிகளின் மேற்சொல்லப்பட்ட உண்மைகளை மணிவாசகப் பெருமான் ஒன்றுபடக் கூறுகின்ருர்.

வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்ருயை என் சொல்லி வாழ்த்துவனே.

எனவே உலகெலமாகி வேருய் எங்களுடனுமாய் நீங்காது நின்று அளப்பிலா அருளினுல் எங்கள் யாவரையும் வாழவைக்கும் இவைகள் வழிநின்று அன்று ஆலின் கீழிருந்து உரைத்த அறத்தின் வழிவந்த மறைப்பொருளின் சுகத்தை இனிய தமிழில் எடுத்துரைக்கும் தேவாரத்தின் உண்மைகளை உளத்திற் கொண்டு உய்வோமாக.

# நீராடல் நீறணிதல் பூசனை புரிதல்

காலையில் துயில் எழுந்தவுடன் நீராடல் மிகவும் நன்று. அதிகாலையில் நீராடி திருநீறு அணிந்து மலர் கொய்து இறைவனை வழிபடுதல் எமது சைவ வாழ்க்கையில் ஒவ்வொருவரது முதற் கடமையாகும்.

நீராடுதலைப் பற்றி பெரியபுராணத்து மிக அழகாக பல விடங்களிலும் சொல்கின்ருர். ''நீராடித் தருப்பித்து நியமங்கள் பல செய்வார்'' என்றும் ''வைகறை உணர்ந்து போந்து புனல்மூழ்கி'' எனவும். தொண்டர் தண்கயம் மூழ்கி என்று திருஞான சம்பந்தப் பிரானும் எடுத்து மொழிகின்ருர். காலையில் நீர் மூழ்குதல் உடலிற்கு ஓர் குளிர்ச்சி கண்கள் முதலிய அங்கங்களில் நோய் முதலிய இலேசாகவராது,

அடுத்து திருநீறு அணிதல். நீராடியபின் அநுட்டான முறைப்படி தங்கள் வசதிக்கேற்ப நீறணிதல் நன்று. திருநீறு அணிதல் மிக உள்ளத்தூய்மை தருவதொன்ருகும். திருநீறு இறைவனின் மேனியில் பூத்தது. புனிதமாவது. ஆகவே அதனை அணியும் போது நாமும் புனிதமடைகிருேம்.

நோய்வாய்ப்பட்டு நீராட முடியாதவர் திருநீறு அணிந்து கொண்டால் அதுவே புனிதமாகும் என்று

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர தீபம்

இதழ் 1 | பிங்கள வருஷம் ஐப்பசிமாதம் 1 வெள்ளிக்கிழமை | சுடர் 3

# நாய் உற்ற செல்வம்

இவ்வுலகில் இறைவனின் அருள் செல்வத்தை மிக இலகுவில் எவரும் கிரகித்துக்கொள்ளும்படி அறிவுறுத்துகிறார் மாணிக்கவாசகர். அவர் ஓர் அரசவண்டுடன் மொழிகின்றார். மிக அழகாக சிறு வார்த்தையால் விளங்கிட வைக்கிறார். அந்த வண்டை நோக்கி சொல்வார்.

''அரசவண்டே என்னுடைய நிலையில் நான் யாதாயினேனோ என்றால் காமம் குரோதம் வெகுளி சந்தேகம் என்னும் நோய்களால் மூத்து அதனால் மிக வருந்தி இங்கு இருந்தேன். எனக்கு ஓர் செல்வம் தரப்பட்டது; அது நாய்க்கு கொடுத்தது போன்று அதன் அருமையை நான் சிந்திக்காதபடி போயினேன். அதை அனுபவியாதிருந்தாலும் அச் செல்வம் யாதென நயந்து உணரவும் மாட்டாமல் போயினேன். அப்படியான அறிவற்ற நிலையில் இருந்த என்னை நோக்கி வந்து எனது தாய் தன்பிள்ளையில் கொண்ட அக்கறை போன்று என்னை ஆதரித்து நீ சடப்பொருள் அல்ல சித்துப் பொருள் என்று என்பால் உள்ள அச்செல்வத்தை நான் பெறுமாறு ஆண்டு என்னையும் பொருளாகக் கொண்டு இவ்வுலகில் என்றும் அழியாத இன்பத்துடன் வாழவைத்தான். அவன் இயல்பு சொன்னால் முற்றிலும் கருணையின் உருவமாக அமைந்த செல்வன். அவன் இறவாத இன்பத்திற்கே என்னை ஆளாக்கினான். அத்தகைய வள்ளலுக்கு நீ சென்று ஊது. வீணான வேறு வேலை பாராதே என்கின்றார். இந்தவகை அவர் கூறிடும் பொழுது நாயுற்ற செல்வம் நயந்தறியாத வண்ணம் என்கின்றார். இநத நாய் உறற செல்வம் யாது. அது எவ்வகை எனச் சிந்தித்தால்; நாய் ஒன்றினை நாம் வளர்க்கின்றோம்; மெத்தையில் படுக்கவைக்கின்றோம். நல்ல பொன்னின் ஆபரணமாக அதற்கு அணிகின்றோம். தங்கப்பட்டி கட்டினோம். அன்றியும் எம் காரில் எம்முடன் ஏற்றிக் கொண்டு போகின்றோம். இப்படி எல்லாம செய்தாலும் நாய்க்கு அதன் அருமை தெரியுமோ? அதற்கு தெரியாது. நான் மாளிகையில் இருக்கின்றேன். தங்க நகைகளை போட்டேன். காரில் உல்லாசமாகப் போறேன் என்பது விளங்குமா? இல்லையே. அது எல்லாம் பெற்றாலும் அது பெண்நாயினைக் கண்டால் பின்னால் ஓடுதல். சண்டையிடல் குரைத்தல் அதன் நுனிவாலை வளைத்தல் நீங்குமோ அல்லாமல் தன் உணவின் எட்டுணையேனும் பிறநாய்க்கு கொடுத்திட மனங் கொள்ளுமோ ?

நல்ல ஒரு மாளிகையில் இருக்கின்ற நான் இந்தவகை என் செல்வநிலை உணர்ந்து திருந்தலாமா என்று நினைக்குமோ? முடியாது. அதே போன்று இறைவன் நல்ல அருட்செல்வத்தை யார்க்குமே தந்திருக்கின்றார். நாம் அதனை ஒரு காலேனும் சிந்திக்கின்றோமில்லை.

மணிவாசகரும் இந்த இறைவனது அருட்செல்வத்தின் பெருக்கினை அது ஒவ்வொருவரிடமும் உள்ளது. அதை யாவரும் பெறலாம் அதில் பரம பிதா யாரையும் வஞ்சிக்கவில்லை என்பதை ''யாவரும் பெற உறும் ஈசன் காண்க'' என்கின்றார்.

விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனால் எத்தனையோ வாகன வைத்திய உல்லாச ஓசை இசைக்கருவிகளை நாம் பெற்றிருக்கின்றோம். அதன் மூலமாக நாம் பல இன்பத்துறைகளைப் பெற்று நாம் மகிழ்ச்சி உறுகின்றோம். ஆனால் இவைகள் அழிந்து போம் பழுதுபட்டுப் போய்விடும். ஆனால் மனிதனிடத்தில் உள்ள இந்த அருட்செல்வம் ஒரு காலமும் கெடாது பழுதடையாது. இந்தவகை இந்த அருட்செல்வத்தால் விளையும் இன்பம் என்றும் உள்ளது. நிலையானது அது ஒன்றே.

இதனை கொழும்புத்துறை யோக சுவாமிகள் அருமை பட உணர்ந்து சொல்லி யுள்ளார் அது வருமாறு

''உவமை கடந்த இன்பம் எல்லாரிடத்தும் உண்டு. தவம்செய்வார் தாமறிவார்'' என்று.

எமது வாழ்வில் எத்தனையோ நோக்கங்களுடன் வாழ் கின்றோம். கணம் தோறும் நோக்கங்கள் மாறுகின்றன. அருகாமை அயல் எங்கும் பாடுபட்டுத் தேடி நல்ல வீடுகட்டி கார் வேண்டி சிறந்த உத்தியோகம பார்த்து இப்படி பலதுறையான இன்பங்களாக பெருகு கின்றன. அவற்றைப் பெருக்கி முன்னிலை அடைந்த போது பலரும் மதிப்பார். கண்டால் வலிய சிரிப்பார். அத்தகைய அதிகாரதோரணை உடையாரைக்குப் பயந்துஒடுங்கி நிறபாரும்சிலர் உளர்.

இந்தச்செய்கை களைக்கண்டபோது நாமும்ஏன் அவ்வகை வரக்கூடாது அது தானே பிறவி யின் சிறப்பு. இவைகளை அடையாதவன் எல்லாம் பேயன் என்றே நினைக்கின்றோம்.

இப்படியாக நினைந்து அந்த நோக்கங்களுக்காக வாழ்வை அமைத்தோம். முடிவில் என்ன அத்தகைய சிறப்புகளுடன் வார்ந்தார்க்கு நேர்ந்தது? சிநதிக்கின்றோமா? இல்லைசிந்தனை வந்தாலும் மறுகணம் மாறிவிடுகிறது. இது தான் மாயையின் வலிமை.

இதனை எமது குருமரபின் முதல்வர் திருமூலர் மிக வேடிக்கையாகப் ப செய்திருக்கிறார். அவர் பாடற்குமந்திரம் எனவே பெரியோர் பொருள் கொண்டனர். அது வருமாறு ''நாட்டுக்கு ந பி நம்மூர்த்தலைமகன் காட்டுச் சிவிகை ஒன்றில் ஏறி கடை முறையாக நாட்டாாகள் பின் செல்ல முன்னே பறை கொட்ட நாட்டுக்கு நம்மி நடக்கின்றவாறு'' அதைப் பாருங்கள் என்கின்றார்.

ஆதலால் வாழ்க்கை என்பது வடிவாக உண்டு உடுத்து வாழ்ந்து ஒரு நாள் இறப்பதா? அப்படி இறந்தபோது பலரும் செத்த வீட்டில் நன்று சிரிச்சு கதைச்சு உபசாரத்துக்கு ஒருக்கால் அழுதிட முடிவடைவதா வாழ்வு? இதனை சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருமைபடச் சொல்கின்றார். அது வருமாறு ''செத்த போதினில் முன்னின்று நம்மை சிலவர் கூடிச் சிரிப்பதன் முனபாக; உமக்கு ஒரு சிந்தை தரப்பட்டதே அந்தச் சிந்தையால் இதை நினைக்கவேணடாமோ? மனம் இருக்கின்றதே! அந்தமனத்திற்கு சொல்லுங்கள் உனது வாழ்நாளில் வஞ்சனை எப்பொழுதும் இருக்கிறது. ஆகவே கவனமாக நடந்திவாய்'' என்றதாக.

இவ்வகையாக நாயன்மார் தாம் பெற்ற இன்பநிலையைத் நாமும் பெறும் படி பாடிச் சென்றிருக்கின்றார். எமது நாயன்மார் எல்லாரும் மரணத்தை வென்றவர்.

இந்த வகையாக இந்தப் பிறவி ஒன்றின் மூலமாக இந்தஉலகில்; இருந்து தான் துன்பம் பிறப்பு இறப்பு ஆதியான இந்தத்தீமைகளை அகற்றி உய்தி அடைந்திட வழி உண்டு. இந்த உலகை விடுத்து வேறெங்கிலும் போய் பேரின்ப நிலையை அடைய முடியாது.

''அவமே பிறந்த எனை இறவாமல் அன்பர்பணி அமுத ஆலயம் புகுத அருள்வோனே'' என அருணகிரியார் இதை மொழிந்தனர். ஆதலின் இந்த அருள் செல்வத்தை நாம் உணர்ந்து பேறடைவோமாக.

'வாழ்க உலகெலாம்''

# ஆளுநரை தேர்ந்து யானை

பெரிய புராணத்து ஒருவரலாறு தரப்படுகின்றது. அதுதான் மூர்த்தி நாயனார் என்று ஒரு அடியவர் இருந்தார். அவர் மதுரையில் உள்ள சோமசுந்தரக் கடவுளுக்குத்தினம் தோறும் சந்தனம் அரைத்து அதனால் சுவாமிக்கு சந்தனக்காப்பிட்டு வருபவர். அவர் நாள்தோறும் பெருமானுக்கு இந்தப் பணியினைச் செய்துவர அந்தக்காலத்தில் அந்த நாடு படையெடுப்பிற் குள்ளாயது. வேறு நாட்டுஅரசன் ஒருவன் பாண்டி நாட்டைக் கைப்பற்றினான். அதனால் அதன் தலைநகரம்மதுரை வேற்று நாட்டு அரசனின்கைக்குள்ளாயது. அவன் தனது ஆட்சியை கொடுங் கோன்மையாக நிகழ்த்தத் தொடங்கினான்.

அதனாலே அவன் மூன்று கண்ணுடைய சிவபெருமானின் அடியவர்க்கு பெரும்அல்லல்புரியத்தொடங்கினான். அவன் சமண சமயத்தைச் சார்ந்தவன். சமணர்கள் பொல்லாதவர்கள். வஞ்சனை புரிவதில் பேர் போனவர்கள். அந்ததீயவர்க்கு இவன் உடந்தையாகி; அதனால் அந்த நாட்டில் வாழும் சிவனடியார்களை பெரும் துன்பப் படுத்தினான்,

முடிவு சொல்லிட முடியாது துன்பங்களைச் செய்பவன் எங்கள் அன்பின் உருவான மூர்த்தியாரையும் இகழ்ச்சி செய்ய முற்பட்டான். அதனால் அவருடைய தொண்டிற்கு எத்துணை யான தீங்குகள் செய்திடமுடியுமோ அவையெலாம் செய்தான். அந்த அரசனும் அவனது சமண குருமாரும் முடிவென்பதிலாத தீங்கு செய்யவும் அதனால் எங்கள பெருமானார் மூர்த்தியார் தாம் கொணடபணியில் நின்றும் விலகினாரல்லர். தினமும் மதுரையில் உள்ள சோம சுந்தரப் பெருமான் திருமேனிக்கு நன்கு சநதனக் காப்பு அணிந்து வழிபட்டு வருவராயினர்.

அது கண்டு அரசன் மூர்த்தியார் சந்தனக் கட்டை அரைத்திட அதனைவாங்கும் படி செல்லும் வாணிபத்துறைகளையும் மூடச் செய்தான். கொடுங் கோன்மையாக ஆளும் அவன் இப்படிச் செய்திட கங்கையைச் சடையுடைய கடவுட்கு அன்பர் மூர்த்தியாரும் தம சிந்தை மிக நொந்தார். அப்போது அவர் நினைக்கின்றார்; இந்த வகைஅற்பச் செயலில் சமணருடன் தன் பொழுதைக் கழிக்கும் பாதகனாய இந்த அரசன் மாய்ந்திட; உண்மை நெறிதழைக்கும் திருநீற்று நெறியினைஉணர்ந்த ஓர் அரசனைஇந்த நாடு என்று பெறும் எனவாக. இப்படி நினைந்து கொ டு சந்தனக் காப்பிட சந்தனக் கட்டையினை எங்கும் பகல் முழுவதும் வாங்கும் படி தேடி கிடைத்திட முடியாது சோர்ந்து களைத்து வருந்துவாராய் மாலைப் பொழுதில் தனது பெருமானின் கோயில் சேர்ந்தார். என்றும் எம் பெருமானுக்கு அங்கு அழகிய சந்தனக் காப்பிட்டு வணங்கிய அவர்க்கு அன்று அது கைகூடாமையால கவலை பெருகியது என் செய்வார் அவர் உள்ளம் கசிவால் உருகிட கண்ணீர் பெருகநினைக்கின்றார் எம்பெருமானுக்கு நான் என்றும் இடுகின்ற சந்தனக் காப்பு இன்று தவறும் படி நேர்ந்தாலும் சந்தனக்கட்டை தேய்க்கைக்கு குறைவில்லை. அதையே தேய்ப்பேன் என்று சந்தனத்தை தேய்க்கின்ற கல்லில் தனது முழங்கையை வைத்து தேய்க்கத் தொடங்கினார். அதை அன்பினால் ஊன்றித் தேய்த்திட அது தோல் தேய்ந்து தசை தேய்ந்து உள் எலும்பும்நொருங்கி உள்ளாக உள்ள மூளையும் இரத்தமும் தசையுமாகச் சந்தனக் கல்லின் நாற்புறமும் பரந்து வடிந்து பெருகுகின்றது. அது கண்டு பொறுத்திலர் மதுரைப்பெருமான். அசரீரியாக அன்று இருளில் ஓர் வாக்கு அருளுடன் உவந்து எழுகின்றது என் ஐயனே! அன்பின் துணிவால் இது செய்திடாதே! உனக்கு இது செய்த அந்தப் பாதகன் ஆண்ட இப்பூமி எல்லாவற்றையும் நீ கொண்டு முன்பு இங்கு துயரமாகப் புகுந்தது முற்றவும் நீக்கி உலகமக்களைக் காத்து பின்பு உன்பணி செய்து நமது பெரும் உலகை அடைவாய் என்று அந்த அசரீரி மொழிந்தருளலும்.

இந்த வணமாக அசரீரிவாக்கியம் கேட்ட மூர்த்தியார் எழுந்து பயந்து முன் செய்த முழங்கை தேய்த்திடும் செயல் நீக்கிட கைகளில் தேய்ந்த புண்ணும் பழுது தீர்ந்து முழுக்கையும் வனப்புடன் நிரம்பியது. அதுவேளை மூர்த்தியார் தெய்வ வாசம் கலந்த ஒளி வடிவுடன் பொலிவுற்றார்.

இது இப்படியாக அந்த நாள் இரவில் அந்த நாட்டில் சமணர்க்கு உடந்தையாக இருந்து வாழ்ந்து கொடுமை புரிந்து பாதகனா அரசன் படுத்தவன் ஆயுளும் அன்றிரவே முடிந்தது. இது எப்படி இருந்தது என்றால் சிவன் அருளின் சார் பிலாத வெறும் கர்மிகள் மரிப்பார் என்னும் உண்மையை வெளிப்படுத்துவது போன்றிருநதது.

அரசன் இறத்தலும் அவன் உடலை தகனம் செய்த மந்திரிகள் அந்த அரசனுக்கு புத்திரர் இலாமையால் அரசபதவிக்கு உரிமை உடையார் வேறு ஒருவரும் இலாத நிலையால் தமக்கு ஓர் அரசனைத் தெரிந்திடத் தலைப்படுகின்றார்.

இவ்வாறு ஓர் அரசனைத்தேர்துவ எப்படி என்று அம்மந்திரிகள் அதற்கு செய்கின்ற வேறு வேறு செயல்களைச் சிந்திக்கின்றார்.

ஒரு நாட்டில் எல்லாச் சிறப்பும் உண்டு என்றாலும் அரசன் செவ்வனே இல்லாத சமயத்தில் நீதியை நிலைநாட்டமுடியாது. அதுவன்றி மக்களாட்சியானால் அது வலியற்ற சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களின் தீர்ப்பில் வாழவரும். அது நீதியாக இருந்தலும் அநீதியாக இருந்தாலும் அப்பெரும் பான்மை மக்களின் தீர்ப்பிலேயே சிறுபான்மையினர் ஆளப்படுவர். நீதிக்கு பெரும் பான்மை சிறுபான்மை என்பது இல்லை.அதுயாருக்கும் பொதுவாவது. அப்படில்லாது ஒருதலையாக வருமேல்நீதிக்குப்பங்கம் அரசாட்சி இந்நாட்டில் வாழும் எந்த ஒரு ஒரு உயிருக்கும் நீதிபாலிக்கவல்லமை உடையதாக இருத்தல் வேண்டும். ஆதலால் கூழும் குடியும் முதலான கொள்கையில்

(தொடர்ச்சி 6–ம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதியால் அனைத்துலகும் . . . .

(2—ம் பக்கத் தொடர்ச்சி)

அறியமுடியாதவன்; அவன் இருக்கும் நெய்த்தானம் என்று நீ நினையுமாறு நினைந்தபொழுது நீ உய்ந்திடமுடியும்.

அலையார் வினைத்திறஞ்சே ராக்கை யுள்ளே
யகப்பட்டு ளாசையெனும் பாசந் தன்னுள்
தலையாய்க் கடையாகும் வாழ்வி வாழ்ந்து
தளர்ந்துமிக நெஞ்சமே அஞ்ச வேண்டா
இலையார் புனற்கொன்றை யெறிநீர் திங்கள் இருஞ்
சடைமேல் வைத்துகந்தான இமையோரேத்தும்
நிலையா னுறைநிறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

ஓடியும் பறந்தும் அலைந்து திரிந்திட வைத்திடுகின்ற செயல்பாட்டினையே புரிகின்ற இந்த உடலினுள்ளே அகப்பட்டு ஆசை என்னும் பெரும்பாசத்தில் தலைப்பட்டு அதற்காக தொழவேண்டாத பலரையும் தொழுது புகழ்ந்து இப்படியான கடைப்பட்ட வாழ்விலே ஆழ்ந்து இனி என்செய்ய எல்லாம் சங்கடமாகுதே என்று சிற்சில வேளைகளில் தளர்ந்து மிகவும என்நெஞ்சமே அஞ்சுதல் செய்ய வேண்டாம். நான் சொல்வதைக் கேள். நன்குடன் இலைசெறிந்து விளங்கும் பசிய கொன்றைமலரும் அலைவீசும் கஙகையும இளம்பிறையும் பெரும் சடைமீது சூடிவைத்து மகிழ்ந்தவன். தேவர்கள் போற்றிடும நிலை உடையவன். அவன் உறைகின்ற திருநெய்த்தானம் என்று நீ நினையுமாறு நினைந்தபொழுது உய்நதிடமுடியும.

தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியா லிந்த
அனைத்துலகும் ஆளலா மென்று பேசும்
ஆங்காரம் தவிர்நெஞ்சே அமரர்க் காக
முனைத்துவரு மதில்மூன்றும் பொன்ற அன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையனெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே

தினைத்தனை யளவேனும எதற்கும் பொறுமை இலாத, உயிர் என்றோ ஒரு நாள் போகும் கூட்டை நிலையான பொருள் என்று மிகவும் நினைந்து உன் மதியால் இந்த அனைத்துலகும் ஆளலாம என்று பேசுகின்ற உனது ஆங்காரத்தை என் நெஞ்சே நீ தவிர்த்திடுவாயாக. தேவர்க்காக வேண்டி அவர்களைத் துன்புறுதத, எழுந்து வந்த முப்புரத்து அசுரரது மூன்று மதில்களும் அழிந்திட அன்று மிகக்கடுமையான மேரு மலையை வில்லாக வளைத்து முப்புரமும செந்தீயில் எரிந்து நீறுக நினைத்தருளிய பெருங் கருணை உடைய கடவுளது திரு நெய்த்தானம் என்று நீ நினைநதிட நினைப்புக் கொண்டால் நீ உய்யலாம். 5

மிறைபடுமிவ் வுடல்வாழ்வை மெய்யென் றெண்ணி
வினையிலே கிடந்தழுந்தி வியல்வேல் நெஞ்சே
குறைவுடையார் மனத்துளான் குமரன் தாதை
கூத்தாடுங் குணமுடையான் கொலைவேற் கையான்
அறைகழலுந் திருவடிமேற் சிலம்பும் ஆர்ப்ப
அவனிதலம் பெயரவரு நட்டம நின்ற
நிறைவுடையா னிடமாம்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

துன்பப் படுமிந்த உடல் வாழ்க்கையை மெய்என்று எண்ணி அதனால் வினையிலேகிடந்து அழுந்தி உன்செயல் திறமுடையது என்று உன்னை வியந்து கொள்ளாதே நெஞ்சே. நான் சொல்வதைக் கேள். தன் நிலையழிந்த மனமுடையார் மனத்தில் உள்ளவன். குமரப பெருமானின் தந்தையாயவன். கூத்தாடுகின்ற குண முடையவன். கொலை புரியும் சூலத்தைக் கையில் உடையவன்; அறைகின்ற தண்டையும் திருவடிகள் மேல் சிலம்பும் ஆர்த்திட இந்த பூமியும் ஏனைய உலகமும் பெயர்ந்து இயங்கிடும பபு நடனம் ஆடி நின்ற நிறைவுடைய கடவுளின இடமாம் நெய்த்தானம் என்று நெஞ்சே நீ நினையுமாறு நினைய வல்லையாகில் உய்யலாம். 6

பேசப் பொருளலாப் பிறவி தன்னைப்
பெரிதென்றுன் சிறுமனத்தால் வேண்டி யீண்டு
வாசக் குடல்மடவார் போக மென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே
தூசக் கரியுரித்தான் தூநீ றாடித்
துதைந்திலங்கு நூல்மார்பன் தொடர கில்லா
நீசர்க் கரியவன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

பேசி மகிழ்வதற்கு ஏதும் ஒரு பொருளலாத இப் பிறவியினை பெரிது என்று உன் சின்ன மனத்தால் வேண்டிக் கொண்டு; வாசம் நிறைந்த கூந்தலுடைய பெண்களுடன் அணைந்து அன்பாகிக் கொள்ளும் போகம் என்கின்ற அதனுள் நீ வீழாது வருவாய் என் நெஞ்சே! கொடிதான யானையை உரித்தவன். தூய நீற்றினை அணிந்தவன் துதைந்து விளங்கிடும் முப்புரி நூல் அணிந்த மார்புடையவன். அவனைத் தொடரா திருக்கின்ற நீசர்க்கு கிடைத்தற்கு அரியவன். அவனது நெய்த்தான மென்று நீ நினையுமாறு நினைந்த போது உய்யலாம். 7

அஞ்சப் புலனிவற்று லாட்ட வாட்டுண்
டருநோய்க் கிடமாய வுடலின் தன்மை
தஞ்ச மெனக்கருதித் தாழேல் நெஞ்சே
தாழக் கருதுதியே தன்னைச் சேரா
வஞ்ச மனத்தவர்கள் காண வொண்ணா
மணிகண்டன் வானவர்தம் பிரானென் றேத்தும்
நெஞ்சர்க் கினியவன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

(தொடர்ச்சி 6—ம் பக்கம் பார்க்க)

## தவம் தனக்கு. . . .

2—ம்பக்கத் தொடர்ச்சி

முதல் நீங்கள் தருமத்தைப் புரியுங்கள் எல்லாரிடத்தும் அன்பாயிருங்கள். கொலை களவு வஞ்சனை பொறாமை இவற்றை நீக்குங்கள். சிவனை நினைத்து பெரும் தவம் புரியுங்கள், இவைகளே அன்றி இந்த உலகில் நாம் செய்திட வல்ல செயல் வேறு ஏது உளது! வேறுய செயல் யாவும் உமக்கு உறுதியான நன்மை எதையும் தரமாட்டாது.

தனது உடம்பினை அதன் இச்சை வழி இணங்கிடாது கட்டுப் படுத்தி இன்பத்துறைகளை ஒறுத்து தவம் புரிவார்தான் இந்த உலகிலும் அந்த உலகில் உள்ளாரும் அதிசயித்திடும மிக்க பேறுகளுடன் வாழ்வார்கள். அவர்தான் தன்னைச் சேர்ந்தவரை தீங்கின்றிக் காக்கமுடிபவர். தமது பகைவர்க்கு அழிவுசெய்திட வல்லவர். இன்னமும் தவம் செய்பவர் தாம் விரும்பிய எந்த ஒரு அருமையான பொருளையும் பெறுபவர். அதுவன்றி அவர் மரணத்தையும் வென்று நித்தியராகவும் வாழ்வார். இவை திடமாகும். ஒரு சந்தேகமும் இதில் இல்லை.

இன்னமும நான் திரும்பவும ஒருக்கால் சொல்கின்றேன் உமது பிறவியை தீங்கான வழியில் ஏவப்பட்டு பலர்க்கும் துயர் புரிந்து இரப்பார்க்கு இல்லைஎன்று இறுமாப்புடன்கூறிவஞ்சித்து பலபொருள்தேடி அதுவேசரதம் என்ன நம்பி இருந்து முடிவில் உம்பிறவியை மரணம் என்னும் காலன் கையில் கொடுத்திடாது நல்நெறிப்பட வாழ்ந்து கொள்ளுங்கள். தவம் செய்வார்க்கு சிவன் அருள்வான். அதுசத்தியமாகும் என காசிபமுனிவர் தமது மைந்தர்க்கு உபதேசித்துள்ளார்.

இந்த தவத்தையே பேணி உயர்வடைந்த பெரியோர் அளவற்றவர். இந்த வகையை நாமும் உணர்ந்து கடைத்தேறவிதியுண்டு.

# பொறாமை

நெருப்பு பொல்லாதது சுடும். சுட்டால் ஆபத்து நேரும். ஆனல் இந்த நெருப்பு இல்லாமல் உலகில் நாம் வாழ முடியாது. ஏனெனில் உணவு சமைத்திட; தேவர்கட்கு பிதிர்கட்கு அமுது கொடுத்திட அக்கினி வேண்டப்படுவது ஆனல் எமது உள்ளத்து ஒரு நெருப்புப் போன்றுள செயல் நிகழ்கிறது. அதுதான் மற்றையாரது உயர்வை நலத்தை நாம் கண்டு சகித்திட முடியாது எழுகின்ற வேதனையான ''பொறாமை'' என்பது. இந்த பொறாமை என்னும் நெருப்பு கொண்டவனின் உள்ளத்தைச் சுடும் என்றமையால்; அழுக்காறு பொல்லாத நெருப்பு என பெரியோர் மொழிவர். இந்த தன்மையை நன்றுடன் திருஞானசம்பந்த சுவாமிகள் தமது திருப்பதிகம் ஒன்றில்; ''பொய் மிகுத்தவாயராய் பொறாமையோடு செல்லும் நீர் ஐமிகுத்த கண்டராய் அடுத்து இரைப்பதன் முனம்'' உண்மைப் பொருளாய கடவுளை அடைந்து கொளல் நலம் என்கின்ருர்.

திருஞானசம்பந்த சுவாமிகளது திருவாக்குப்படி இந்த பொறாமையே பொய் சொல்லுவதற்கும் காரணமாகின்றது போலும். பொய்யும் பொறாமையும் இணை பிரியாதிருப்பன என உணர்த்துவது போன்றது அப்பாடல்.

ஒருவர் ஒரு காரியத்திற்காக உதவுமாறு எம்மைக் கேட்கின்ருர் ஆனல் உதவக் கூடிய வசதி இருந்தும் அவர் செயலில் எமக்கு ற்ற குரோதத்தின் காரணமாக தீடிரென நாம் இப்ப வசதியில்லை என மறுத்துடுகின்ரும். இதன தன்மையைச் சிந்தித்தால் உதவக் கூடியவனக இருந்தும் அதைச் செய்ய விடாது தடுத்தது பொறாமையேயாகும். அதனல் பொய் சொல்வதற்கும் ஓர் வாய்ப்பைத் தந்தது பொறாமையே.

பொறாமை உள்ளத்து குடிகொண்ட பொழுது அதுஒருவனுடையசீலத்தைக்கெடுக்கும். தவநெறியைச் சேர விடாது தடுக்கும். தன்னையே மிக மேலாக மதித்திடும். இதனல் அருள் நெறியைக் கைகூடவிடாது.

அடுத்து இந்தப் பொறாமை என்னும் தீ ஓர் சமூகத்து அல்லது ஓர் இனத்து பரவுமானல் அது அந்த இனத்தையே அழித்துவிடும். அந்த இனத்தை எந்நாளும் அடிமைநிலையில் வைத்திடும். ஆகவவ ஓர் இனம் முன்னேற்றமடைவதாயின் இந்தத் தீங்கான பொறாமை அவ்வினத்தை விட்டு பூரணமாக அகலுதல் வேண்டும்.

இந்தப் பொறாமை தான் கோபத்திற்கும் முதற் காரணம். ஒருவர் தரும சிந்தையுடையாராக வர முடியாது இருப்பதும்இந்தப் பொறாமையின் காரணமே. நன்குடன் சிந்தித்துப் பார்த்தால் ஒருவர் விரக்தி மனப்பாங்கு அல்லது மனவெறுப்பு கொள்வதற்கும் வஞ்சனை செய்தற்கும் அடிப்படை பொறாமையே. இந்தப் பொறாமை என்னும் நெருப்பை அடக்குவதற்கு ஒரேவழி அன்பும் ஆசாரமும். தெய்வீக ஆசார உள்ளமுடையார் பாலாக இந்தத் தீவினையாய நெருப்பு மூண்டு கொள்வதில்லை.

நெருப்பை நாம் நீரின் மூலமாகவே நீக்குகின்ரும். அதே போன்ற இரக்கம் கண்ணியம் கட்டுப்பாடு அன்பு இவைகள் உள்ளக்கசிவை காட்டுவன. வெறுப்பு கோபம் பொறாமை இவைகள் நெருப்பின் வசமாவன. ஆதலால் நீரின் மிகுதியாய அன்பு கண்ணியம் சால்பு என்னும் குணங்களால் எமக்கும் பிறர்க்கும் தீங்கினைப் பயத்திடும் இந்தக் கொடுமையை நீக்கிக் கொள்ளலாம்.

அழுக்காறு பொல்லா நெருப்பு;
தவம் ஆசாரம் அருளுக்கு வித்து.

## சைவமங்கையரின் உயர்வு

பெரிய புராணத்து ஆசிரியர் சேக்கிழார் எங்கள் நாயன்மாரின் மனைவியரை சிறப்பிக்கும் பொழுது இலக்குமியிலும் சிறந்தவர். எனவே அவர்களை சொல்கின்ருர் மானக்கஞ்சாற நாயனர். மகளாரை அவர் சொல்லிடும் போது ''திருமகட்கு மேல்விளங்கும் செம்மணியின்தீபம்'' என்கின்ருர். இயற்பகைநாயனரின் மனைவியாரை ''திருவினும் பெரியாள்'' என்கின்ருர்.

இன்னமும் அரிவாட்டநாயனர் என்னும் நாயனரின் மனைவியாரை அவர் மொழிகின்ற போது ''நைகரம் இல்லா அன்பின் நங்கை'' என்கின்ருர். நைகரம் என்பது வஞ்சனை. எமது சைவகுலத்தில் பெண்கள் வஞ்சனை இலாத ஓர் பெருங்குணம் படைத்து இருப்பவர். கணவன் பால் பொய் மொழிதல் சாதுரியப் பேச்சு இவைகள் எமதுசைவமங்கையரிடத்து ஒரு காலமும் இருந்ததில்லை. இந்தப் பதி அன்பின் நிறைவால் உயர்ந்தவரே காரைக்கால் அம்மை, மங்கையர்க்கரசியார், திலகவதியார் போன்றவர். எதுவாகவரினும் ஓர் சைவப்பெண்ணிற்கு கணவன் ஒன்றுதான். அவனை உண்மைவழி சேவித்துத்தான் திருவருள்நிலை எய்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதியால் இந்த.... (5—ம் பக்கத்தொடர்ச்சி)

ஐநது வகையான புலன்கள் இவற்ருல் ஆட்ட ஆட்டுண்டு அரிய பெருநோய்க்கு இடமாகிய இந்த உடலின் தன்மை உனக்குத் தஞ்சமாவது எனக்கருதி இந்த உலக இன்பவாழ்வில் தாழாதே என் நெஞ்சே உலகில் இதில் அழுங்கினர் படுகின்ற பாட்டைக் கண்டும் நீயுமா ஆழ் நினைப்பாய் வேண்டாம். விட்டுவிடுவாய். தன்னைச் சேராத வஞ்சனை உடைய மனத்தவர்கள் காண முடியாத முழுவதும் அழகிய நீல கண்டன். தேவர்கள் தமது பெருமான் என்று போற்றும் நெஞ்சுடையார்க்கு இனியவன். அவன் இருக்கும் நெய்த்தான மென்று நினைந்த போது உய்ய முடியும். 7

பொருந்தாத உடலகத்திற் புக்க ஆவி
போமா றறிந்தறிந்தே புலைவாழ் வுன்னி
இருந்தாங் கிடர்ப்படநீ வேண்டா நெஞ்சே
யிமையவர்தம் பெருமானன் றுமையா ளஞ்சக்
கருத்தாள் மதகரியை வெருவச் சீறுங்
கண்ணுதல்கண் டமராடிக் கருதார் வேள்வி
நிரந்தரமா இனிதுறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

பொருந்தாத இந்த உடம்பினுள் புகுந்த ஆவிபோமாறு பலதடவை அறிந்தும் அறிந்தும் இந்த புலைத்தன மான வாழ்வை நினைந்து இந்த உடலில் இருந்து இடர்பட வேண்டாம் நீநெஞ்சே. தேவர்களது பெருமான் அன்று உமையம்மையார் அஞ்சிட கரியகால் உடைய மதயானையைத் திடுக்கிட சீறியருளிய கண்ணுதற் கடவுள் தன்னைக் கருதாதவருடைய யாகத்தைக் கண்டு அமர் புரிந்து அழித்தவன். நிரந்தரமாக அவன் இனிதே வாழ்கின்ற நெய்த்தானமென்று நினையுமாறு நினையவல்லை யாகி நீ இருந்தால் உய்யலாம். 9

உரித்தன் றுனக்கிவ் வுடலின் தன்மை
உண்மை யுரைத் தேன் விரதமெல்லாம்
தரித்தும் தவமுயன்றும் வாழா நெஞ்சே
தம்மிடையி லில்லார்க்கொன் றல்லார்க் கன்னன்
எரித்தான் அனலுடையான் எண்தோ ளானே
யெம்பெருமா னென்றேத்தா இலங்கைக் கோனை
நெரித்தான் நெய்த் தானம் மேவி னானை
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

இந்த உடலின் தன்மை உனக்கு உரித்துடைய தல்ல. உண்மையினைச் சொல்லிவிட்டேன். விரதங்கள் எல்லாவற்றையும் அநுட்டித்தும் தவம் புரிந்தும் வாழாத நெஞ்சே! தம்மிடத்து சீலமுடைய வழிபாட்டு நெறி ஒன்று இல்லாதவர்க்கு அல்லாதவன். கருப்புவில்லுடைய காமனை எரித்தவன். நெருப்பினை ஏந்தியவன். எட்டுத்தோளுடையவன். எம்பெருமானே எனப்போற்றி வணங்கிடாத இலங்கை அரசன் இராவணனை நெரித்தவன். திருநெய்த்தானம் மேவி இருந்தவனை. நினையுமாறு நீ நினைந்து கொண்டால் உய்யலாகும்

மறை கலந்த மந்திரமும் நீரும் கொண்டு வழிபாடு செயும் வழியடியார்க்கு அருள் புரியும் வண்ணம் போற்றியவாறு. 10

## ஆளுநரைத்.... (3—ம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பட்டதாயினும் அரசன் தோள்வலியின்றி இந்த உலகம் வாழும் தகவுடைதல்ல என தெளிவுகொண்டனர். (சூழ்-பொருளாதாரம், குடி - நாசரீகச் சிறப்பு.

இந்தவகை தெளிவுகொண்டு ஓர் யானையைக் கண்கட்டி விட்டால் அந்தயானை எமக்கு அரசரை தன் துதிக்கையால் தேர்ந்து எடுத்திடட்டும் என எண்ணினர்.

அவ்வகை ஒருவரைத் தேர்ந்திட நூல்கள் விதிமுறை வகுத்த விதிப்பிரகாரம் நாம் யானையை முதற்கண் அர்ச்சிப்போம் என்று ஓர் பட்டத்துயானையை எடுத்தனர். அந்த யானைக்கு அர்ச்சனை புரிந்து வழிபட்டு யானையே நீ இப்பூமியினைத் தாங்கி ஆண்டிட ஓர் தலைவனை உன்தோளால் சுமந்து வருக என்று கூறி அந்த யானையின் கண்ணை ஓர் பட்டினுல் கட்டி விடுத்தனர்.

அந்த யானை வழிபாட்டின் அருள்வழி அந்த மதுரை நகர்வீதி எல்லாம் திரிந்துபோய் பின்னா பெருமதில் சூழ வானில் ஓங்கும் கோபுரமுடைய சோமசுதரப் பெருமானின் கோயில்வாய்தல் சென்று அங்குநின்ற மூர்த்தியாரை முன்னுகத் தாழ்ந்து வணங்கி; அவரைத் தனது துதிக்கையால் எடுத்து தன் தோள்மேல் வைத்துககொண்டது.

யானை மூர்த்தியாரை தோள்மேல்வைத்தமை கண்டதும் எல்லாரும் ஆநந்தமுற்று மூர்த்தியார் பாதங்களில் பணிந்தனர். பின்பு மூர்த்தியாரை மங்கலம்பொலிய வாழ்த்தி முடி அணிவித்திட முற்பட்டனர். ஆனுல் அவரோ, "நான் முடிசூடி ஆள்வது என்ருல் இந்த நாட்டில் பழுதுசெய்த சமணம்நீங்கி அருள்நெறி தரும் சைவம் ஓங்கில் அரசாள்வேன்" என்றனர். மந்திரிகளும் அதற்கு உடன்பாடாயினர். அதன் வகை அரசாள உற்ற உபகரணமாக, திருநீறே அபிடேகமாகவும்; நல்ல அரச ஆபரணம் இறைவனின் கருணையின் உருவமான உருத்திராக்கமாகவும்; தனது சடையே முடியாகவும்கொண்டு அரசாண்டார். இந்த அரசாட்சி எப்படி இருந்திருக்கும். இதை நீங்கள் சிந்தித்தாலே துயர் நீங்கும்.

## கட்டுரை தந்துதவிய பெருமக்கள்

எட்டிலும் எண்பதிலும் (திரு மு. வைரமுத்து மானிப்பாய்.)
சிந்தனை (சோ. அருணசலம் அரசாங்க அதிபர்.)
ஆகம மாகி நின்று அண்ணிப்பான் சிவன்
(சைவத்திருவாளர் பொ. தியாகராசா பொன்னலை.)

## எட்டிலும் ... (3—ம் பக்கத்தொடர்ச்சி)

தோறும் பெருகிக்கொள்கின்றன. இவைகளை நீக்கிடவழிபடும் இடங்களாக அமைந்த புனிதக் கோவில்கள் களியாட்டு அரங்குகளாக மாறி வருகின்றன.

பத்தி சிரத்தை, அடக்கம் மனத்தூய்மை, இவை சம்பந்தப்படாத வழிபாடு பயனற்றது. எம் சிறுமையை யுணர்ந்து நாம் வழிபடும் தெய்வத்தின் பெருமையை நோக்கி, மனங்கசிந்து உருகுவதே சிறந்த வழிபாடகும்;

"நெக்கு நெக்கு நிலைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னர் சடைப்புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கட்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே"

(பொக்கம் - நிலையில்லாதன வற்றை நிலையான தெனக் கருதும் பொய்; நக்கு - நகைத்து) கோயிலுள்ள மூர்த்திக்கு முன்னல் எவ்வளவு திரவியங்களினைக் குவித்து நெய் வேத்தியம் பண்ணினேம்; திருவிழாவுக்கு எத்தனை கூட்டம் மேளம் பிடித்தோம்; கோபிற் பிரகாரத்தை எத்தனை முறைவலம் வந்தோம்; எத்தனை நாள் விரதம் அனுட்டித்தோம்; இவைஎல்லாம் பிராதனம். வழிபாட்டின் போது எங்கள் மனோபாவம் எப்படியிருந்தது; அங்கலாய்ப் பொழிந்து சாந்த மாயிருந்ததா; நெஞ்சம் நெக்கு நெக்கு உருகிய தனல் புனித மடைந்ததா; மனம் பதைப் பொழிந்ததா? இவை தான் பிரதானம்.

கடவுள் எங்களிடம் வேண்டுவது எங்கள் அன்பை; நாம் கொண்டு செல்லு'பழம் பாக்கு வெற்றிலைமட்டுமல்ல அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால், இன்பநிலைதானே வந்தெய்தும் பராபரமே" என்ருர் தாயுமானவர். சிவனடியார்களுக்குப் பணி செய்ய என்னை ஆளாக்கிவிடு என்று வேண்டுவதேயன்றி, வேறென்றும் தாயுமானவர் கேட்கவில்லை. அன்பர்க்குச் செய்யும் பணி ஆண்டவனைச் சென்றடையும். ஆண்டவனுக்கு நாம் செய்யும் சிறந்தபணி அவனை மனம் ஆர நினைத்தல். நாம் ஒருகால் நினைக்கில் இருகாலும் அருள்புரிவது அவன் இயல்பு. பக்தியிலலைன்றி ஆண்டவனின் அருளைப் பெற்று விடமுடியாது. பக்திசெய்வதற்குப் புலனடக்கம் இன்றியமையாதது. ஆலயங்களும் வழிபாட்டரங்குகளும் புலனடக்கத்துக்குச் சாதகமாயிருக்கும் இடமாகவே அமையவேண்டும். ஆடம்பரங்களினுலும் ஆரவாரங்களிலும் அதற்குப் பாதகமாயிருக்குமாயின், ஆலயவழிபாடு பயனளிக்க முடியாது என்பதை நாமுணதல் அவசியம்.

பெறுதற்கரிய பிறவி மானுடப் பிறவி, அதன் குறிக்கோழி முத்திப்பேறு. அம்முத்திக்குவலியை யோகசுவாமிகள் சொல்ள் வைத்துச் சென்றிருக்கின்ருர்.

"முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ,
சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம்,
நித்தியா நித்திய வந்து விவேகம்,
பத்திசெய்யடியரைப் பணிதல், பகலவன்
எழுமுன் எழுகல், இரும்புனல் ஆடல்,
வழுவில் ஐந்தெழுத்தும் வான் முறைபயிலல்,
குருபதம் பணிதல், கோலநீறணிதல்,
வரும்பசிக்குண்ணல், வாயுறவாழ்த்தல்
சாத்திரம் பயிறல், தன்போற்பிறரையும்
பார்த்தல், பணப்பற்றொழித்தல், பண்புடன்
வார்த்தையாடல், வாதனைதீர்த்தல்,
கோத்திரம் குலம் எனுங்கோட்பாடொழிதல்,
எட்டுணையேனும்
வேண்டுதல் வேண்டாமையின்றி யென்றும்
ஆண்டவனடிக்கீழ் அமர்ந் வாழ்தலே'.,

## நீராடல் .... (3—ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியோர் மொழிவர். திருநாவுக்கரசர் இதனை "விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி" என்றும்; "சிவாயநம என்று நீறணிந்தேன்" என்றும் மொழிகின்ருர்.

திருநீறு இறைவன் என்ற பொருளை அடைதற்கு ஓர் கவசம். "நீற்றுக்கவசம் புகுமின்" என மணிவாசகர் சொல்கின்ருர். நீறணிதலால் எம் உளளத்து இருள் நீங்கும் இதனை சேக்கிழாரும் "நீறணிந்தார் அகத்திருளும் நிறைசங்குல் புறத்திருளும் மாற வரும் திருப்பள்ளி எழுச்சி" என மொழிகின்ருர்.

திருநீறு எமது சமயத்தின் உட்பொருளாவது. எமமை உள்ளும் புறம்பும் தூய்மை செய்வது. இதனை திருஞான சம்பந்த சுவாமிகள் "சமயத்தில் உள்ளது நீறு" என்கின்ருர். சமயம என்பதின் பொருள் இறைவனுடன் தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பு என்பதாகும். ஆகவே சமயத்தில் உட்பொருளாய் நீறு விளங்குகின்றது. இதை விட மேலான பொருள் எம் சைவத்தில் இல்லை. அணிவார்க்கு சுந்தரமான மனப்பாங்கைத் தருவதும திருநீருகும். அது இறைவனது பொருள் என நினைந்து அணிந்து பாருங்கள் கவலை பிணியாவும் பறந்தேபோகும.

நீராடி நீறணிந்து புறத்தும் உள்ளும் தூய்மையான பின் செய்வது பூசனை. நல்ல மலர் கொண்டு நாள் தோறும் இறைவனை வழிபடுவது நலம். நாள் முழுவதும் அல்லது காலை மத்தியானம் மாலை எனும் முப்போதும் மலர் தூவி வழிபடல் மிக நன்று. இதனை கைப்போது மலர் கொண்டு; காதலித்து வானோர்கள் முப்போதும் வழிபட்டு என்று திருநாவுக்கரசரும்; "பூவார் மலர் கொண்டு அடியார் யதொழுவார்" என்று திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் "நாள் நாளும் மலர் இட்டு வணங்கார்" என்றும் "நல்லமலர் கொண்டு எந்நாளும் வழிபட்டு நாள் கழித்தல் நலம் என்று சொன்னவர் தம் திருப்பாதம் தொழுவேனே எந் நாளும்" என்று யோகசுவாமிகளும் "நன்மலர் இட்டு இறைஞ்சேன்" என்று மாணிக்கவாசக சுவாமிகளும் மொழிவதாலும் இப்பூசனையின் சிறப்பு பெறப்டும்.

கல்லால விருட்சத்தின் கீழ் கடவுள் இருந்து அறம் நால்வர்க்கு உபதேசித்தவை இவையே. இந்த பூசனையின் அருமையை பெருமையை சேக்கிழார் பெரியபுராணத்து நயம்பட மொழிகின்ருர். அது வருமாறு.

திருக்கைலையில் எம்பெருமானை எம் அம்மை அன்புடன் வணங்கி இதனைக் கேட்டாள். ஐயனே அளவிலாத ஆகமங்கள் வேதங்களை நீர் அருளிச் செய்தீர். அதன் உட்பொருளாவது யாது? என்றலும்; அவளை நோக்கி சுவாமி சொல்கின்ருர். உமையே இப்பூமியில் சென்று நம்மை பூவும் நீரும் கொண்டு வழிபடுதலே ஆகமங்களின் சுருக்க கருத்தாவது என மொழிந்தார். இது உண்மையாவது. அந்த ஒருவழி பாட்டை இந்த உலகில் வந்து புரிந்து என்றும் பூமியில் காஞ்சியில் தங்கி எம் அம்மை நோற்றிருக்கின்ருள் என அந்த வரலாற்றை அற்புதமுடன் மொழிகின்ருர் சேக்கிழார்.

இந்த வகை வழிபாடு புரிதல் எவ்வளவு சிறநதது என்பதை நினைந்து கொள்ளுங்கள். நீராடி நீறணிந்து நித்தலும் வழிபாடு செய்யும் வஞ்சனை அற்ற பெரியோரது பாதமே எமக்குத்துணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகமாகிநின்று அண்ணிப்பான் சிவன்

**இறைவனால் அருள் செய்யப் பெற்றன ஆகமங்கள். அவைகள் தன்னை அடையும் வழியாவன. அவற்றுள் கிரியை நெறியினைக் கடைப்பிடிக்கும் முறைகளில் உள்ள சில இங்கு தரப்படுகின்றன. எமது அறிவு தொழில் இச்சை வகைகளை நல்வழிப் படுத்தலே கிரியை நெறியின் பேறுவன.**

### விநாயகவழிபாடு

1 உலகங்கள் யாவற்றிற்கும் முதற்காரணமாகியபொருள் மகாமாயை அல்லது பிரணவம் எனப்படும். அதற்குத் தலைமையாயிருக்குஞ் சிவசத்திக்கு விநாயகர் என்று பெயர். விநாயகர் எடுத்த கருமத்தில் விக்கினங்களாக வரும் எதனையும் நீக்கியருளும் கருணைஉடையவர் என்பதுமாம். ஆதலால் எவ்வுலகத்திலேனுஞ் செய்யப்படும் எந்தக்கிரியையும இனிது முடிதற்கு விநாயகக்கடவுளது திருவருள்வேண்டி முதற்செய்யப்படுங் கிரியை விநாயக வணக்கம்.

### குருவணக்கம்

சிவன் மானிட மேனி தாங்கி ஆகமங்களை அருள் செய்தலால் அவர் வழியாக வந்து இந்நெறியை தமக்கு உதவிய குருவையும் தியான மூலம் வழிபடல்.

### ஆசமனம்

2 ஆசமனமாவது மூவகைத்தத்துவங்களையும் நினைத்து வலக்கைப் பெருவிரலடியிற்பொருந்திய அற்பதண்ணீரை (உழுந் தமிழ்ந்திய தண்ணீரை) மந்திரத்தோடு மூன்றுமுறை பருகி உதடுகளைப் பெருவிரலடியினால் இரு முறையும் உள்ளங்கையினால் ஒருமுறையுந்துடைத்து மந்திரத்தோடு உடம்பின் பகுதிகளைத் தொடுதல். மூவகைத் தத்துவங்களை மந்திரத்தோடு நினைத்தலால் அவற்றாலாக்கப்பட்ட உடம்பு அருள்வழிநிற்கும். மந்திரத்தோடு இடங்களைப் பெருவிரலணி விரல்களாலே தொடுதலினால் அவ்வுறுப்புக்களால் வரத்தக்ககுற்றங்களை அவற்றின் அதிதேவதைகள் நீக்குவார்.

மூவகைத்தத்துவம்—ஆன்மதத்துவம் வித்தியாதத்தும சிவதத்துவம் என்பன

### பிராணயாமம்

அஃதாவது பிராணவாயுவை யடக்குவதினால் மனதை ஒருவழிப்படுத்தித் திருவருளிலே நிறுத்துதல் (பிராண + ஆயாமம்—பிராணவாயுவை அடக்குதல்.)

இதுசெய்யும் முறைமை:—வலக்கையிற் சுட்டுவிரலையும் நடுவிரலையும் உள்ளே மடக்கிப் பெருவிரலினால் வலமூக்கைப் பிடித்துக்கொண்டு சங்கிதை மந்திரத்தை உச்சரித்து இடமூக்கால் மூச்சையிழுத்தபின்பு, பெருவிரலணி விரல்களால் இரு மூக்குகளையும் பிடித்துக்கொண்டு அம்மந்திரத்தை உச்சரித்து மூச்சையடக்கியும், அணிவிரலால் இடமூக்கைப் பிடித்துக்கொண்டு சங்கிதையை உச்சரித்து மூச்சை வெளியே விடுவதுமாகும். பிராணயாமம் பொறிகளையும் மனத்தையும் சுத்திகரித்து அவைகளை அடக்குதற்குத் துணையாகின்றது.

### பவித்திரமணிதல்

4 பவித்திரமாவது மோதிரம் போலத் தர்ப்பையினாற் செய்யப்பட்டு அணிவிரலிலணியப்படுவது. இதன் நோக்கம் கிரியை செய்யும்போது மனம் வாக்குக் காயங்களால் வரத்தக்க பாவங்களினின்றுங் காத்தல். (பவித்திரம் பதனாத்திராயதே —பாவத்திலே விழுதலினின்றுங் காப்பது. காமிகம்)

### சங்கற்பம்

சங்கற்பமாவது செய்யப்போகுங் கிரியையிலே மனதைப் பதித்து அதிலே நிறுத்துவது. இன்னகாலத்திலே இன்ன இடத்திலே இன்ன நோக்கமாக இது செய்யப்போகிறேன் என்பது சங்கற்பவாக்கியத்தின் சுருக்கமான கருத்து. நிகழுஞ் சிருட்டித்தொடக்கத்திலிருந்து அன்றுவரையும் உள்ளகாலம் இதிலே குறிக்கப்படுதலாலே, காலத்தின் பெருமையுமதற்காலவாழ்வின்சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் இதன்மூலமாகவே உணரத்தக்கன.

சங்கற்பமுறை—ஆண்கள் வலதுகையிலே தருப்பை பூ அரிசி அல்லது எள்ளு முதலியவற்றை வைத்துக்கொண்டு வலதுகையை மேலாகவும் இடது கையைக் கீழாகவும் வைத்து இடதுபெருவிரலை வலதுபெருவிரலாலமர்த்தி வலதுமுழந்தாளில் வைத்திடல். பெண்கள் இடமுழந்தாளில் வைத்திடல்.

சங்கற்பவாக்கியத்தின் கருத்து—சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரமாவின் இரண்டாவது பரார்த்தத்தில் சுவேதவராககற்பத்தில் வைவஸ்வதமனுவந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் கலியுகத்தில் முற்பகுதியில் சம்புத்துவீபத்தில் பாரதவருஷத்தில் பரதகண்டத்தில் மேருவுக்குத் தெற்கே ———(இடத்தின்பெயர் பிரபவமுதலான அறுபது வருசத்துள்———(இன்ன)வருசத்தில் ———(இன்ன) அயனத்தில்——— (இன்ன பருவத்தில் ———(இன்ன) மாதத்தில் ———(இன்ன)பட்சத்தில்——— இன்ன)திதியில் வாரத்தில் நட்சத்திரத்தில் (இன்ன)நன்மையான போகம் (இன்ன)நன்மையான கரணமுள்ளதாய் விசேசகுணத்தோடு சேர்ந்த இந்தப்புண்ணியதினத்தில் ———(இன்ன) நோக்கமாக ———(இன்ன) கிரியை செய்யப்போகிறேன் என்பதாவது.

### கும்பம்வைத்தல்

5 கடவுளை மூர்த்திமுதலியவற்றிலே வழிபடுவதுபோலக் கும்பத்திலும் வழிபடும் செயலிற்காக இது செய்யப்பெறும் கும்பம் தம்பம் விம்பமெனும் மூவகை இடத்தும்வழிபடல் கிரியை முறையாகும்.

இந்தக்கும்பம் கடவுளதுஉடம்பின்பாவனை. அதிலே சுற்றியசீலை தோலாகும் நூல் நாடிகள்; குடம் தசை; தண்ணீர் இரத்தம்; அதனுட் போடப்படும் இரத்தினம் எலும்பு; தேங்காய் தலை: மாவிலை தலைமயிர்; கும்பத்தின் மேல் இடும் தர்ப்பை குடுமியாகும். மந்திரம் ஓதுவதனால்பதிக்கப்பட்ட மந்திரம் உயிர்ஆகும்.

### சகளீகரணம்

6 சகளீகரணமாவது சரீரத்தைச்சிவரூபமாக்குதல். (சகளம்—(சிவ)சரீரம் கரணம்—செய்தல்) சிவவடிவத்துக்குரிய சிவமந்திரங்களை எமது சரீரத்திற் பதித்தலாற் சிவவடிவமுண்டாகும். இதில் மூன்றுபடிகளுண்டு. முதலாவது கையைச் சுத்திசெய்தல் கரசுத்தியெனப்படும். அதுகையிலே சிவபெருமானைப் பூசித்துச் சிவமந்திரங்களைப் பதித்தல் கரநியாசம் எனப்படும்.

அந்தக் கையினாலே, மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு விதிகளுக்கேற்ப உடம்பின் மற்றப்பகுதிகளிற் சிவமந்திரங்களைப் பதித்துச் சிவவடிவமாக்கல் அங்கநியாசம் எனப்படும்.

### சிவோகம்பாவனை

9 மந்திரசெபஞ் செய்யமுன் சிவோகம்பாவனைசெய்யப்படும். அஃதாவது தன்னைக் கடவுளாகப் பாவித்தல். (சிவ—கடவுள், அகம்—உள்ளம் பாவனை வித்தல்) தான் ஆன்மா என்ற கருத்தைவிட்டுத் தனக்கு உயிராகிய சிவமாகத் தன்னைப்பாவித்தல். இது நல்லொழுக்கத்துக்கும் உலகப்பற்று நீங்குதற்கும், சிவவசமாதற்கும் பெருந்துணை. இஃது தனக்குரிய அகங்காரமமதைகளில் நின்றும் நீங்காது நீங்கி தான் தெய்வீகநிலையாதல் என்க.

### பூசை

10 பூசை தொடங்கமுன் ஸ்நானம் முதலியன முடித்து ஆசனமும் சகளீகரணமும்செய்த பின்பு ஆசனத்துக்கும் மூர்த்திக்கும் முறைப்படி பூசை செய்து, கடவுளை நினைத்து அந்த மூர்த்தியிலே எதிர்முகப்படுத்தல் ஆவாகனம் எனப்படும். இதன்பின் தாபனம் சந்நிதானம் சந்நிரோதனம் செய்து பாத்தியம் ஆசமனம் அர்க்கியம கொடுத்து பூவைச்சாத்தலாகிய ஏழு கிரியைகள் உண்டு. இவற்றின்மேல் அபிஷேகம் தூபதீபம் அர்ச்சனை தோத்திரம் ஆகிய இவைகள் செய்யப்படும்.

இவற்றுள் ஆசனபூசை மூன்றுவகைப்படும். ஆசனங்களை விரித்துச்சொல்லாமல் ஆசனமென்ற பெயரால மாத்திரம் பூசிப்பது ஒன்று இரண்டாவது ஆதாரசத்தி அனந்தர் தர்மம் ஞானம் வைராக்கியம ஐசுவரியம் எனஆறுக ஆசனத்தை வகுத்துச்செய்தல். மூன்றாவது இவைகளோடு மற்றைய தத்துவாதிகள் யாவற்றையும் ஆசனமாகக்கருதிப் பூசித்தல். இவற்றுள் ஆதார சத்தியானது சகல அண்டங்களையுந்தாங்குவது. அனந்தாசனம் அசுத்தமாயைக்குத் தலைமையாயுள்ளது. தர்மம் முதலிய நான்கும் அனந்தரின் சாமர்த்திய ரூபங்களாம்'

தாபனம் ஆசனத்தில் இருக்குமாறு வேண்டுதல். சந்நிதானம் அந்த இடத்தில் அருள்சுரந்துநிற்குமாறு வேண்டுதல். சந்நிரோதனம் பூசை முடியும் வரையும் அவ்வாறு நிலைபெறுமாறு வேண்டுதல். பாத்தியம் திருவடிகளிலே தீர்த்தத்தைவிடுதல். ஆசமனம் முகத்தில் விடுதல். அர்க்கியம் தலையில்விடுதல். புஷ்பம் முடியிலே சாத்தப்படுவது.

### சிவபூசை

11 இது மிகவும் அகலமான கிரியை. ஆசமனம் விநாயகவழிபாடு முடிந்தபின்பு செய்யவேண்டியவை :—பூதசுத்தி, அந்தர்யாகம், இடச்சுத்தி, மந்திரசுத்தி, லிங்கசுத்தி, ஆசனபூசை, சிவநியாசம், அபிஷேகம், ஆவரணபூசை, சிவலிங்கஆராதனை, செபம், தோத்திரம், குருஸ்துதி, பிரதஷணம், நமஸ்காரம் ஆகியவைகளாம்.

பூதசுத்தியில் மூன்றுபகுதிகளுண்டு. சரீரசுத்தி செய்தற்காக அதனோடு தொடர்புள்ள ஆன்மசத்தியை யோகமார்க்கமாகச் சிவபெருமானுடைய திருவருளிற் சேர்த்தல்வேண்டும். தத்துவங்கள்யாவற்றையும் மகாமாயையில் ஒடுக்கிச் சூக்குமசரீரப்பகுதிகளையும் விந்துவையும் பிரமாமுதல் சிவம் ஈறாகிய மூர்த்திகளில ஒடுக்குதல் சூக்குமசரீரசுத்தி. வெளியுடம்பை மந்திரமுறைப்படி வலிகெடச்செய்து திருவருளாகிய அமிர்தத்தினாலே சுத்தமாகச்செய்தல் தூலசரீரசுத்தி.

அந்தர்யாகமாவது மனதிற் பூசைசெய்தல் (அந்தர் —உள், யாகம்—பூசை)வெளியே செய்யும் முறைபோல இருதயத்திலே சிவபெருமானுக்குப் பூசைசெய்யவேண்டும். பூசையின்பலனை அவருக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு வெளிப்பூசைசெய்தற்கு உத்தரவுபெறுக.

மந்திரசுத்தியாவது மந்திர எழுத்துக்களை மாத்திரைதவறாமல் அவற்றுக்குரிய இடங்களைச்சார உச்சரித்தல். லிங்கசுத்தி விக்கிரகத்துக்குச்செய்யப்படும் அபிசேகம் முதலியன.

ஆசனமாகப் பூசிக்கப்படுவன பிருதிவி முதல் மகாமாயை ஈறான தத்துவங்கள்யாவுமாம.

சிவநியாசம— சிவலிங்கத்திலே தலைமுதல் கால்வரையுமுள்ள அங்கங்களாக மந்திரங்களைப் பதித்து முழுவதையும் சத்தி வடிவமாக்குக.

பின்பு இருதயத்திலே பூசித்த சிவனை லிங்கத்திலே எழுந்தருளும்படி வேண்டிக்கொண்டு மற்றைய உபசாரங்களைச்செய்து தூபதீபங்காட்டி அபிசேகம்செய்க.

ஆவரணபூசை:—அஃதாவது சிவலிங்கத்தைச் சூழ்ந்துநிற்கும் மூர்த்திகளுக்குச் செய்யப்படும்பூசை. ஐந்து ஆவரணங்கள் உள்ளன. முதலாவதிற் பஞ்சபிரமமந்திரங்களும இரண்டாவதில பீடதளத்தின்மேல் அனந்தர் முதலிய அட்டவித்தியேசுரரும, மூன்றாவதில் (பீடத்தின்நடுவில) நந்தி முதலிய கணேசுவரரும், நான்காவதில் (பீடத்தின் அடியில்) லோகபாலகர்களும், ஐந்தாவதில் (ஆகாரசிலையின்மேல) தசாயுதங்களும் பூசிக்கப்படும். இவைகள் எல்லாம சிவமான பான்மையாகக்கொள்ள வேண்டும்.

சிவபூசையிலுள்ள உபசாரங்களின கருத்து :—உபசாரங்கள் ஐந்துபூதங்களாலாகிய உடம்பினாற் பூசித்துப் பூசையை ஒப்புக்கொடுத்தலே. வாசனைப்பொருள்களும் நைவேத்தியங்களும பிருதுவிபூதத்தையும, நீர் பால் முதலியவை அப்புவையும், விளக்குதீபதிருபரணங்கள் தேயுவையும, தூபம் சாமரை வாயுவையும, மணி வாத்தியம் தோத்திரம் ஆகாயத்தையும் சார்ந்தவை.

### அக்கினிகாரியம்

12 அஃதாவது நெருப்பை ஓமகுண்டத்தில் உண்டாக்கி அதைச் சிவசொரூபமாக்குதல். சிவாக்கினியிலுள்ள விசேசமாவன: அது நைவேத்தியத்தை நேரே ஏற்பது, அநேகவிதமான சுத்திகளைச் செய்யத்தக்கது, சிவகிரியையின் பலனை அந்தந்தநேரமே கொடுக்கத்தக்கது. நெருப்பை ஓமகுண்டத்தில் வைத்து சிவனையுஞ் சத்தியையும் பூசித்து அவர்களுடைய திருவருளே அந்த அக்கினிக்கு உயிராகப் பெற்று அந்த அருள் வடிவத்திலே கடவுளுக்குப் பூசைசெய்தல் அக்கினிகாரியமெனப்படும். கும்பத்திலேனும் வேறிடத்திலேனும் உள்ள மூர்த்தியை அந்தச் சிவாக்கினியிலே பூசைசெய்தலுமுண்டு. பூசைசெய்யும் போது அதற்கு அடையாளமாக இரண்டையும் நூலினாலேனும் தர்ப்பையினாலேனும் தொடுப்பர். இவ்வாறு தொடுத்தல் நாடிசந்தானம் எனப்படும்.

### ஆகுதி

ஆகுதி— அக்கினியிலே சொரியப்படும நெய் பொரி சாதம் முதலியவற்றிற்கு ஆகுதியென்று பெயர். இவைகள் பல்வேறு திரவியங்களாவன. அந்த அந்த தெய்வங்களுடைய மந்திரம் சொல்லி அவர்கட்கு அருத்துவன

தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிய திருப்புகழை அறைவோம்

**அருணகிரியார் அப்பன் முருகனை மொழிந்த திருப்புகழ் அமிர்தம் போல்பவை. அவைகளில் எத்தனையோ ஞான யோக கிரியை சரியை விளக்கங்கள் நிறைந்துள்ளன. பிற்காலத்து வாழ்ந்த தாயுமானவருமே அருணகிரியாரின் பாடல் பெருமையை வியந்து "ஐயா அருணகிரி! அப்பா உனைப்போல மெய்யாக ஓர் சொல் விளம்பினர் ஆர்!" என மொழிந்து அற்புதமடைகின்றார். அப்பன் அருணகிரியின் பாடலில் சில இவையாகும்.**

உம்பர்தருத் தேனுமணிக் — கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் — துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் — பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் — றருள்வாயே
தம்பிதனக் காகவனத் — தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் — கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் — பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் — பெருமாளே.

தேவதருக்கள், சிந்தாமணி, காமதேனு ஆகிய இவைகள் தம்மை அடைந்தார் அனைவருக்கும் வேண்டிய போகப்பொருள்களை உள்ளக்கடு வாகி கொடுக்கும். அதேபோல அடியேனும் தருமம் என்னும் பொருளை உணர்ந்து உள்ளக் கசிவாகி அதனால் உமது அருளால் தேன்கடல்போல் தித்திக்கும் சிவ அமுதாம் அருளூறிய இன்ப இரசத்தைப் பருகி அடியேன் உய்ய எனது உயிர்க்கு தேவரீர் ஆதரவுற்று அருள்வீராக.

உமது தம்பிதனக்காக வேண்டி, யானைவடிவாய் வனத்தில் எழுந்தருளியவரே! தேவரீரது தந்தையாகிய சிவபிரானையும் தாயாகிய உமையம்மையாரையும் வலஞ்செய்து அதனால் அருள்தரப்பெற்ற கனியை உடையவரே! உமது அன்பர் தமக்கு எப்போதும் நிலைப்பொருளாய் விளங்குபவரே! ஐந்து கரங்களையும் யானைமுகமும் உடைய பெருமானே.

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப் பயின்று
கடையில் வந்து தித்துக்குழந்தை — வடிவாகி
கழுவியங்கெ டுத்துச்சு ரந்த
முலையருந்தி விக்கிக் கிடந்து
கதறி அங்கை கொட்டித் தவழ்ந்து — நடமாடி
அரைவடங்கள் கட்டிச் சதங்கை
யிடுகுதம்பை பொற்சுட் டிதண்டை
அவையணிந்து முற்றிக் கிளர்ந்து — வயதேறி
அரியபெண்கள் நட்பைப் புணர்ந்து
பிணியுழன்று சுற்றித் திரிந்
தலையுமுன் க்ருபைச் சித்த மென்று — பெறுவேனே
இரவிஇந்திரன் வெற்றிக் குரங்கி
னரசரென்று மொப்பற்ற வுந்தி
யிறவனெண் கினக்கர்த்த னென்றும் — நெடுநீலன்
எரியதென்றும் ருத்ரச் சிறந்த
அநுமனென்றும் ஒப்பற்ற அண்டர்
எவருமிந்த வர்கத்தில் வந்து — புனமேவ
அரியதன் படைக்கர்த ரென்று
அசுரர்தங் கிளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின் — மருகோனே
அயனையும் புடைத்துச் சினந்து
உலகமும் படைத்துப் பரிந்து
அருள்பரங் கிரிக்குட் சிறந்த — பெருமாளே.

தாய்வயிற்றில் கருவாகி பத்துமாதம் வளர்ந்து முற்றி பின்னர் வெளியில் வந்து தோன்ற, எடுத்துக்கழுவி அழகிய கைகளில் ஏந்தி மகிழ்ந்து; பின்னர் அன்பால் சுரந்த பாலை எமக்கு ஊட்ட முலைப்பால் அருந்தி விக்கிக் கிடந்து கதறி அழுதும். கைத்தாளம்போட்டு விளையாடி, பின்னர் தவழ்ந்து நடமாடி அரையில் ஞாண்கயிறுகள் கட்டி சதங்கைகள்; குதம்பை, பொற்சுட்டி தண்டைகள் இவை அணிந்து பின்னர் வயதேறி வளர்ந்து:

அரிய வடிவான பெண்கள் நட்பைப்பெற்று அவருடன் கூடி மகிழ்ந்து அதனால் நோய்கொண்டு தடுமாறி வைத்தியநிலையங்கள் மாறிமாறித் திரியும் இப்பாழான வாழ்வு நீங்க முருகா அருள்பொழியும் உன் கிருபைச்சித்தம் என்றுபெறுவேனோ.

சூரியன், இந்திரன், பிரமன், அக்கினி ஆகிய தேவர் இப் பூமியில் சுக்கிரீவன், அநுமான், நீலன், சாம்பவன் முதலியோராக அவதரிப்ப அவர்தலைவராய் இராமராக இப் பூமியிலே தோன்றி அசுரர்கிளையாகிய இராவணனை வெற்றிகொண்ட நாராயணக் கடவுள் மெச்சத்தகுந்த மருகோனே.

பிரம தேவரையும் முன் ஒருகால் குட்டிச் சினந்து சிறைவைத்து உல உலகத்தையும் கருணையால் படைத்து பரிந்து அருள் சிறந்த மேலாகிய மலை எனப் போற்றப்பெறும் திருப்பரங் குன்றத்தில் பொலிவுடன் வீற்றிருந்து அருளும் பெருமானே.

மூளும்வினை சேர மேல்கொண்டி டாவைந்து
பூதவெகு வாய மாயங்கள் தானெஞ்சில்
மூடிநெறி நீதி ஏதுஞ்செ யாவஞ்சி — அதிபார
மோகநினை வான போகஞ்செய் வேனண்டர்
தேடவரி தாய ஞேயங்க ளாய்நின்ற
மூலபர யோக மேல்கொண்டி டாநின்ற — துளதாகி
நாளுமதி வேக கால்கொண்டு தீமண்ட
வாசியன லூடு போயொன்றி வானின்கண்
நாமமதி மீதி லூறுங்க லாவின்ப — அமுதூறல்
நாடியதன் மீது போய்நின்ற ஆநந்த
மேலைவெளி ஏறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற — தொருநாளே
காளவிட மூணி மாதங்கி வேதஞ்சொல்
பேதைநெடு நீலி பாதங்க ளால்வந்த
காலன்விழ மோது சாமுண்டி பாரம்பொ — டனல்வாயு
காதிமுதிர் வான மேதங்கி வாழ்வஞ்சி
ஆடல்விடை ஏறி பாகங்கு லாமங்கை
காளிநட மாடி நாளன்பர் தாம்வந்து — தொழுமாது
வானமுழு தாளு மோர்தண்டு ழாய்தங்கு
சோதிமணி மார்ப மாலின்பி ஞளின்சொல்
வாழுமுமை மாத ராள்மைந்த னேயெந்தை — இளையோனே
மாசிலடி யார்கள் வாழ்கின்ற ஊர்சென்று
தேடிவிளை யாடி யேயங்ங னேநின்று
வாழுமயில் வீர னேசெந்தில் வாழ்கின்ற — பெருமாளே

மூள்கின்ற வினைகள் சேர, ஐந்து பூதங்களின் மாறுகிய மாயங்கள், என் நெஞ்சில் கூடலாலே, மூடப்பட்டு அதனால் நெறி, நீதி ஏதும் இலாத வஞ்சன், மாதர் மையலால்மயங்கிப் போகஞ் செய்வேன். ஆகியேன் நான்தேவாகளும் நாடற்கரிதாகிய ஞாதிரு ஞானஞேயம், எனக் கூறப்படும் மூலபரயோக நிலை கொண்டு நின்று என்றும் உளதாகிய பொருளை நாட பிராணயாம நெறி கொண்டு வாசியோகத்து அனல் ஊடுசென்று மேலாகிய வெளியில் ஊறும் அமுதினை நாடி, அதன்மீதும் மேல்போய் அங்கு நின்ற, ஆநந்த மேலை வெளியேறி நீயின்றி நானும் இன்றி இன்னும் இவையன்றி பிறிது ஏதும் உணராத சாந்த சுகநிலை எய்தி வாழ்கின்றது என்று ஒரு நாளோ.

நஞ்சினை உண்டவளாய், அருளுடையவளாய், வேதஞ் சொல் பவளாய் வினை தீர்ப்பவளாய் காலால் வந்த இயமனை மோது பவளாய், பூமியாகி நீராகிய, நெருப்பாகி, ஆகாயமாகி, காற்றாகி இவை அனைத்தும் செறிந்து வாழ்பவளாய். இடப வாகனமுடைய பெருமானின் பாகத்தமர் பவளாய், காளியாய், நடமாடுபவளாய், நாளும் அன்பர்வந்து தொழப்படுபவளாய், வானஉலகம் முழுதாளும் சோதி மணிமார்புடைய நாராயணப் பெருமான் தங்கை எனப் படுபவளாய், நிறைந்த இன்சொல் பயில்பவளாய், நிறையும் அம்பிகை தந்த திருக்குமரா, என் தந்தையே, கந்தவேளே.

மாசு இல்லாத அடியார்கள் வாழ்கின்ற ஊர் எங்கு எனத்தேடி அங்கு சென்று விளையாடியே, அங்ஙனே நின்று வாழும் மயில் வீரனே! திருச்செந்தூரில் வாழ்கின்ற பெருமானே.

நிலையாப் பொருளை உடலாக் கருதி
நெடுநாட் பொழுதும் — அவமேபோய்
நிறைபோய்ச் செவிடு குருடாய்ப் பிணிகள்
நிறைவாய்ப் பொறிகள் — தடுமாறி
மலநீர்ச் சயன மிசையாய்ப் பெருகி
மடிவேற் குரிய — நெறியாக
மறைபோற் றரிய ஒளியாய்ப் பரவு
மலர்தாட் கமலம் — அருள்வாயே
கொலைகாட் டவுணர் கெடமாச் சலதி
குளமாய்ச் சுவற — முதுசூராம்
குறிபோய்ப் பிளவு படமேற் கதுவு
கொதிவேற் படையை — விடுவோனே
அலைவாய்க் கரையின் மகிழ்சீர் குமர
அழியாப் புநித — வடிவானார்
அரனார்க் கதிக பொருள்காட் டதிப
அடியார்க் கெளிய — பெருமாளே

நிலையாத பொருள்களாகிய பொன், உடல் இவைகளை ஒரு பொருளாக அடியேன் கருதி அதனால் நெடுநாள் என் வாழ்க்கை அவமே போய்விட்டது. பிற்காலத்து மூப்பினால் என் நிறைபோய், செவிடாகி, குருடாகி, நோய்கள் நிறையப் பீடிக்கப் புலன்கள் கலங்கி, தடுமாறி மலசலம் கிடையில் கழிய மங்குவேற்கு நன்மை தரும் உரிய நெறியாக, வேதங்கள் தாமும் போற்று தற்கரியதாய் எங்கும் பரந்த ஒளியாய் நிறையும் தேவரீரது தாமரை மலர் போலும் திருவடிகளைத் தருவாயே.

கொலையை உலகத்திற் காட்டிய அசுரர் கெட்டழிய அவருடைய இரத்தம் கடல்போல் செறிய, அசுரர் தலைவனான சூரபன்மன் உடல் இரு பிளவாக, கதுவும் கோபமுடைய வேற்படையை விட்டருளிய வேலவரே.

கடல் அலைகள் மோதுகின்ற கரையினை உடைய சீர்பொருந்திய திருச்செந்தூர்க் குமரா, என்றும் அழிவில்லாதவரும் புனிதருமாகிய சிவபிரானுக்கு அறியாத பொருளை அறிவித்தருளிய பெருமானே.

## குரு நாதன் சொன்ன சீலம்

சீலம் தான் காலத்தை வெல்லும் என அருணகிரியார் தமது கந்தர் அலங்காரத்தில் மொழிகின்றார். இந்த சீலத்துடன் நிற்பார்க்கு நீல மயில் மீது ஏறி கோலமுடைய குறத்தி வள்ளிநாயகியுடன் வந்தருளுவான் என மொழிகின்றார். ஆகவே சீலத்தைப் போல் ஒருவர்க்கு உறுதுணையான பொருள் வேறில்லை.

மனத்தை வீண் வழி சிந்தியாது தடுங்கள். கோபத்தை விடுங்கள் என்றும் ஏதாவது ஒரு தருமம் செய்யுங்கள் சிறுமை பெருமை இன்றி இயல்புடன் இருந்தவாறு இருங்கள் முருகன் அருள் தானாக வந்து வெளிப்படும் எனவும் அருணகிரியார் மொழிகின்றார்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கைமணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு. வை. நல்லையா (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) அவர்களால் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் பிரதிபண்ணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org